தென்றல்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆசிரியர்: கண்ணதாசன்

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 22—1—1955 | சனிக்கிழமை | இதழ் 30

சங்கு, சுட்டாலும் வெண்மை தரும்!



★

பெரியார் ராமசாமி, தனது பர்மா மலேயா சுற்றுப்பயணங்களை முடித்துக்கொண்டு, சென்னை மாநிலம் வந்துசேர்ந்தார். இன்னல்களுக்கிடையே பிறப்பித்த ஒரு இயக்கத்தை, எதிர்ப்புகளுக்கிடையே வளர்ப்பித்து லட்சோப லட்சம் மக்களின் ஏகோபித்த ஆதரவைத் தேடிய பெரியார், பர்மாவிலும் மலேயாவிலும் தனது சொற்பொழிவுகளால் நல்ல சூழ்நிலையை உருவாக்கிவிட்டு வந்திருக்கிறார். அறிவியக்கம் இனி, அங்கும் பெருகி வளரும்! இந்த நாட்டில் இருப்பது போலவே, அங்கும் சில சில்லறைகள் இருந்து, "ஆகா ஊகூ" என்று எதிர்ப்புக் கூச்சல் போட்டு மிரட்டியிருக்கின்றன; ஆனாலும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பெரியார் ராமசாமிக்கு பக்க பலமாக இருந்து, கூட்டங்களை சிறந்த முறையில் நடத்திக்கொடுத்திருக்கின்றனர்: பகுத்தறிவுப்பழம், இதுபோன்ற எதிர்ப்புகளால் தளர்ந்துவிடவில்லை. மாறாக, அதிக உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் பர்மா, மலேயா சுற்றுப்பயணங்களை முடித்து வந்ததை அறிகிறோம்.

பெரியார், 'என் குழந்தைகள்' என்று, தி. மு. கழகத்தோழர்களை அங்கு அழைத்திருக்கிறார் என்ற செய்தி மகிழ்ச்சிக்குரியது. குழந்தைகள், கெட்ட குழந்தைகள் அல்ல என்பதையும் அவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டால், பிறகு, அவரோடு இருப்பவர்கள், கண்டதெல்லாம் பேசிக்கொண்டிருக்கமாட்டார்கள். உண்மையைக்கூற, தந்தை பெரியார் தயங்கமாட்டார் என எதிர்பார்க்கிறோம்.

வாழ்க பெரியார்!

★

எண்ணம்

கண்ணதாசன்

'பொங்கல் நாள்' நமக்குச் சுவையான நாளாகக் கழிந்தது, இன்பத் திருநாளாக நடந்தது. பொதுக் காரணம் போக, இன்னொரு காரணம் நமது தென்றல் பொங்கல் மலர் வெற்றி பெற்றதாகும். ஆமாம். ஒரு மலரை வெளியிட்டு விட்டு, அது வெற்றி பெறுமா பெருதா என்று எதிர்பார்ப்பது கூடப் பத்திரிகை உலகில் உண்டு. ஏறக்குறையத் திரைப்படம் மாதிரி தான். அதிலே தென்றல் மலர் பெரு வெற்றியடைந்ததைக் கண்ணூரக் கண்டோம்; மகிழ்ச்சிப் பெருக்கில் மிதந்தோம், ஆனால்.........

விற்பனையாளர்களான நண்பர்களிடமும், ரசிகத்தோழர்களிடமும் இருந்து வந்த கடிதங்களிலிருந்து, அவர்களுக்கு நம்மீது கோபம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. பலர் வசவுரைகளைப் பொழிந்துள்ளனர்! சிலர் கவலைப்பட்டு எழுதியுள்ளனர். காரணம் இதுதான்; பலருக்கு தென்றல் மலர் கிடைக்கவில்லை, கடைகளில் தேடி அலைந்து சலித்து விட்டனர். - சலிப்பு, நம்மீது கோபமாக உருக்கொண்டிருக்கிறது! மதுரையிலிருந்து (கீழ்சந்தைப் பேட்டை) எஸ். முனியப்பன் என்ற தோழர், "தென்றலைத் தீண்ட, பட்ட சிரமம் பகரவும் வல்லதோ!" என்கிருர். "எட்டணு மலரை, கருப்புச் சந்தையில் ஒரு ரூபாய்க்கு வாங்கினேன்" என்று எழுதுகிருர். அண்ணுமலை நகரிலிருந்து (19. இளங்கோ இல்லம்) கே. பார்த்தசாரதி என்றதோழர், "தேடினேன் தேடினேன்-காணப் பெற்றிலேன். வந்ததும் விற்று விட்டது!" என்று வருந்துகிருர்! பெங்களூரிலிருந்து, (மக்கள் முன்னேற்றக் கழகம், லாரிரோட்) தோழர்கள்பதினைந்து பேர் கையெழுத்திட்டு, "ஏஜண்டு வேண்டியவருக்கே பிரதிகள் கொடுத்தார். நாங்கள் ஒருவரும் பெறமுடியவில்லை. இது நியாயமா? முறையாகுமா?" என்று கடிந்து எழுதப்பட்ட கடிதம் வந்தது. இது போலப் பல கடிதங்கள் வந்துள்ளன. நம்மைப் பொறுத்த வரையில், எவ்வளவு அதிகப் பிரதிகள் போடமுடியுமோ அவ்வளவும்போட்டோம். ஆனால், அதற்கு மேலும் ஆதரவு இருந்திருக்கிறது என்று இப்போது தெரிகிறது. குறைந்த விலையில் நிறையக் கொடுக்கும் ஆசை, அதிக ஆதரவைத் தருவது சகஜம் என்றுலும் மலருக்குப்பின் நாங்கள் காணும் ஆதரவை, முதலில் கனவு கூடக் காணவில்லை; அவ்வளவு அதிகம்! நண்பர்கள் நம்பலாம், உண்மையைக் கூறுகிரேம், இந்த மலர் எங்கள் 'கையைக் கடித்துவிட்டது'. காரணம், மலரைப் பார்த்து, அதன் விலையையும் பார்ப்பவர்களுக்குப் புரியும்!

சில ஏஜண்டுத் தோழர்கள், முன்பணம் அனுப்பாமல் பிரதி அனுப்பக் கோரியிருந்தார்கள். நாங்கள் அனுப்பவில்லை. அதனுல் சில ஊர்களுக்குப் பிரதியே வந்திருக்காது. இதற்கெல்லாம்காரணம், முன்னுல் அனுப்பப்பட்ட அறிக்கையை அவர்கள் சரிவர கவனிக்காததுதான். தோழர்கள், ஏஜண்டுகளின் மீது காய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிரேம். மீண்டும் மலரை அச்சிட்டுத்தருமாறு கேட்கிருர்கள். அது விரும்பத் தக்க தல்ல என்று கூற விழைகிரேம்.

மற்றும் மலரின் சிறப்புப் பற்றி, பாராட்டியிருந்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிரேம்.

★

பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிரேம்.

★

அவரும் சொல்லுகிருர்!

கம்யூனிசக் கோட்பாடுகளின் தந்தையாம் பேரறிஞர் கார்ல் மார்க்ஸ், இந்திய பூமியில், மதம் உருவானது சம்பந்தமாக, கூறியிருக்கும் சில தகவல்களைத் தந்துள்ளோம். ஆரிய மதம், பார்ப்பனர்களின் சிருஷ்டியென்று நாம் சொன்னுல், சீறிடும் தோழர்களும் உள்ளார்கள்! 'பேதத்தை உண்டாக்கலாமா?' என்று, கோபத்தோடு பேசுகிருர்கள். அவர்களுக்கு இது! மார்க்ஸூம், சொல்லியிருக்கிருர், **British Rule in India** என்ற கட்டுரையில்:

"ஆதிகாலத்துக்குச் சென்று ஆராய்ந்தால், நம்பமுடியாத கட்டுக்கதைகள் மூலம், இந்தியாவில் தொல்லைகளை 'துவக்கி' வைத்தவர்கள் **பார்ப்பனர்கள்**தான். உலகில் கிருஸ்துவ சகாப்தம், உதயமாவதற்கு முன்பே, இந்தக் காரியங்களைச் செய்தார்கள் அவர்கள். கிராமங்களில் உண்டாக்கப்பட்ட சிறு சிறு வகுப்புகள், ஜாதிப் பிரிவினைகளாலும் உயர்வு தாழ்வுப்பிரிவினைகளாலும் அடிமைப்படுத்தப்பட்டன. இந்தப் பேதங்கள் மனிதனை வெளியிலிருக்கும் நிலைமைகளுக்கு அடிமையாக்கின. சூழ்நிலைகளை ஆட்டிப் படைக்க வேண்டியவன் அவைகளுக்கு அடிபணிய நேர்ந்தது. இதனுல், தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டிய சமுதாயம், மாருத நிலைக்கு கொண்டுவரப்பட்டு விட்டது. இதனுல் மிருகங்களை, வணங்கவேண்டியவனுனன். இயற்கையைக் கட்டியாளவேண்டிய மனிதன், குரங்கை **ஹனுமான்** என்றும், பசுவை—**சப்பலா** என்றும் நம்பிக்கொண்டு அடிபணிந்து கும்பிடலானுன்."

வள்ளுவன் மூத்தோன்!

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி." குறளை குற்றமறப் படித்தவன் சாதிக்கொரு நீதி கூறும் மனு நூலை ஒப்புக்கொள்ளான் என்கிருர் பேராசிரியர் சுந்தரனுர். ஆனுல் பேராசிரியர் வையாபுரி அவர்கள் "மனுஸ்மிருதிக்கும் வள்ளுவரது திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு" என்கிருர். முன்னுள்ள பேராசிரியர் "உள்ளுவரோ" என்கிருர்; பின்னுள்ள பேராசிரியர் "நெருங்கிய தொடர்பு உண்டு" என்கிருர் தினமணி கதிர் தீபாவளி மலரில். நம் மதிப்பிற்குரிய வையாபுரியார் கூறும் சாதாரண தொடர்பு அல்ல, 'நெருங்கிய' தொடர்பு அப்படி மனுவுக்கும் வள்ளுவருக்கும் என்ன இருக்கிறது என்று பார்ப்போம்.

"அபுத்ராகுர்வனுஜ் ஞாதாதேவாம் புத்ரகாதம்யா; ஸபிண்டம் வாஸதோத்ரம் வாக்ருகாம் யக்ரும்தயவியாத்" (மனு) தன் கணவன் இறந்துபோனுல் அல்லது தகுதி இல்லாவிட்டால் மக்களைப்பெற விரும்பும் பெண் தனக்கு விரும்பியவனைச் சேரலாம். "ஆகர்ப்பஸம்பவாத்" கருத்தரிக்கும் வரை அவள்பிற ஆடவனை 'இப்படி' அடையலாம். இதனுல் அவள் கற்புக்கு பங்கம் கிடையாதாம். ஆரிய வேதம் அறைகூவுகிறது இந்த முறையிலே! இதனுல்தான் குந்திதேவி வேறு ஆடவரை அடைந்து ஐந்து பிள்ளைகள் பெற்ருள் போலும். ஆனுல் கடவுளைத் தொழாவிட்டாலும் கணவனையே கடவுளாகக் கருதும் காரிகை பெய்யெனப் பெய்யும் மழை என்கிருர் வள்ளுவர்.

"தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்; பெய்யெனப் பெய்யும் மழை", பெண்மையின் பெருமையை பிரதிபலிக்கும் வள்ளுவர் எங்கே! கணவனை விட்டு வேறு ஒரு ஆடவனுடன் அரவணைக்கச் சொல்லும் ஆரிய மனு எங்கே!

"நியுக்தஸ்யதான்யாயம் யோமாம்ஸம்தாத்திமானவா; ஸ்பரேத்ய் பசுதாம்யாதி ஸப்பவானேக் விகம்சதிம்" (மனு) சிரார்த்தகாலங்களில் மனிதன் மாமிசத்தை உண்ணுவிடில் 21 தடவை மிருகமாகப் பிறப்பான் என்பது பொருள். இவர்கள்தான் அகிம்சையைப் பற்றி ஆலாபனம் செய்கிருர்கள். "புலால் உணவு தள்ளற்பாலதே. புலால் வாழ்வு மனித வாழ்வை விலங்கு வாழ்வாக்குவது. புலையன் உள்ளத்தில் ஒப்புரவு யாண்டிருந்து எழும்?" என்று கேட்கிருர் தமிழ்த் தென்றல் திரு. வி. க. இதே கருத்தை, தன்னிகரில்லா தமிழன் பண்பை "தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிதூனுண்பான்; எங்ஙனம் ஆளும் அருள்" என்கிருர் வள்ளுவர். புலாலை வெறுத்தவனை எல்லோரும் கைகூப்பி வணங்குவர். இதுவே "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிருந் தொழும்" என்கிருர் வள்ளுவர். மாமிசத்தை வெறுத்தவன் மக்கள் தொழும் மாபெரும் மனிதன் என்று கூறும் வள்ளுவன் எங்கே! மாமிசம் உண்ணுன் மாக்களாகப் பிறப்பான் (21 தடவை) என்ற மடமையைக் கூறும் மனு எங்கே!

"பீத்வா பீத்வாபுன்; பீத்வாயாவத பக்தி பூதலே; உத்தாய சபுன: பீத்வாபுனர் ஜன்ம நவித்யதே." கள்ளைக் குடித்துக் குடித்து மெய்மறந்து தரையில் விழுமளவும் குடிக்கவேண்டும்; தெளிந்தபின் எழுந்து குடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மறு பிறவி இல்லை என்கிறது ஆரியம். இத்தகைய 'மகானுபாவர்கள்' மதுவிலக்கு மானிலத்திற்கு அவசியமென மார்தட்டிப் பேசுகின்றனர். "துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர் என்ஞான்றும்; நஞ்சுண்பார் கள்ளுண்பவர்". கள்ளைக் குடிப்பவர்கள் நஞ்சைக் குடிப்பவர்களாவர் என கடிந்து கூறும் தமிழன் பண்பு எங்கே! மது அருந்தியவன் 'மகா' சம்பத்து அடைவான் என்று கூறும் அறியாமையின் பிம்பம் ஆரியம் எங்கே!

மேற்கூறியவற்றி லிருந்து திருக்குறளுக்கும் மனுவுக்கும் உள்ள "நெருங்கிய தொடர்பு" என்ன என்பதைக் கண்டிருப்பீர்கள். ஆகவே ஆரியத்தின் அட்டகாசத்தை அடக்கி சிந்தனையை மறந்து கிடக்கும் செழுந்தமிழர் வாழ்வைச் செழிக்கச்செய்ய 'அய்யரும்' போற்றும் அறிஞர் அண்ணுவின் அணிவகுப்பிலே செல்லுவோம்! வெற்றி பெறுவோம்!

விட்டலபுரம் பி. சுப்பையா.

திருவள்ளுவப் புரட்சி

மீ. சு. இளமுருகு பொற்செல்வி

இன்று திருவள்ளுவரைப்பற்றிப் பேசாத நாவு கிடையாது. விபூதிப் பட்டையும் சரி, நாமதாரியும் சரி, மற்றும் எந்தெந்த வகையினராயினும் சரி திருக்குறளைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் குறள் முழுவதையும் படித்து வள்ளுவர் உள்ளத்தை உணர்ந்து அதன்பின் பேசுவதில்லை. கடவுளைப் படுத்துகிற பாடு கூட—இன்று குறளைப்படுத்துகிற பாட்டுக்கு ஈடாகாது. கடவுளை கள்வனும் வேண்டுவான்; காமுகனும் கைகூப்புவான்; பிறரைக் கெடுப்பவனும் நினைப்பான்; கொலைகாரனும் அழைப்பான்; வேதாந்தியும் கூறுவான். அதைப் போலவே குறள் நெறிக்கு முற்றிலும் மாறுபட்ட மதவாதிகள்; தங்கள் தங்கள் மதவாதத்துக்குக் குறளை இழுத்து வைத்துப் பொருந்தாத கருத்துரை கூறிப் பேசி வருகின்றனர்.

திருவள்ளுவர் மதவாதியல்ல. முயற்சியில் முழு நம்பிக்கை கொண்டவர். தன்னம்பிக்கையில் அசையா உள்ளம் படைத்தவர். அறம் தவறா நெறியில் ஆர்வங் கொண்டவர்! பிறரை அண்டி வாழும் இரவல் வாழ்வை இழித்துரைப்பவர். கடவுளைப்பற்றிய கவலையற்று—மக்களைப் பற்றியும், கண்காண இருக்கும் உலகைப் பற்றியுமே எண்ணியவர். எண்ணியெண்ணிப் பார்த்து வாழும் வழியை வகுத்தருளிய புரட்சிக்காரர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர் வள்ளுவர். ஆரியம் அப்போதுதான் தமிழகத்தில் தளர் நடை போடுங்காலம். ஆரியப்பிடி தமிழர்களை இறுக்கி விடக்கூடாது என்று நினைத்தே திருக்குறளை உருவாக்கிய பெரியார். குறளில் பல இடங்களில் ஆரியக் கொள்கைகளை, ஆரியச்சார்புடைய இதிகாச புராணங்களைக் கேலி செய்தும்; அறவே எதிர்த்தும் குறட்பாக்களை இயற்றியிருக்கிறார். அது தான் திருவள்ளுவப் புரட்சி!

அத்தகைய திருக்குறளில் கூட ஆரியம் புகுந்து கொண்டு அட்டகாசம் செய்கிறது. குறளில் எப்படியெல்லாம் ஆரியம் புகுந்துள்ளது என்பதை ஓரளவு பார்ப்போம். "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு" எனும் குறள் "செய்நன்றி யறிதல்" எனும் அதிகாரத்தில் வருகிறது. "தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய, நட்பினை எழுமையினுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்" என்று பரிமேலழகர் உரை கூறுகிறது. "எழுமை எழுபிறப்பு" என்ற சொல்லை வைத்துக் கொண்டு தான் அந்தக் கருத்துரையை கூறுகிறார் அவர். 'வளையாபதி' எனும் இலக்கியத்தில் கூட எழுபிறப்பு வற்புறுத்தப்பட்டிருப்பதாக உவமையுங் கூறுகிறார். வளையாபதி திருக்குறளுக்குப் பிற்பட்ட நூல். அதுமட்டுமல்ல ஆரியத்தின் அரவணைப்புக்குத் தமிழ்நாடு முழுமையும் ஆட்பட்டபின் தோன்றிய இலக்கியம். "எழுமை" எனுஞ் சொல்லுக்குப் பொருள் வருமாறு:- "எழு, உயர்ச்சி, எழு பிறப்பு" என்று அகர வரிசை கூறுகிறது. இந்த மூன்று சொல்லில் ஒரு சொல்லையெடுத்துக் கருத்து கூறல் வேண்டும்—அதுவும் பொருத்தமான சொல்லாக இருக்க வேண்டும்.

"எழுமையெழுபிறப்பு" எனும் குறட்பா உள்ள அதிகாரம், "செய்நன்றியறித"லாகும். தனக்கு ஒருவர் செய்த நன்றியை மறவாது செய்யவேண்டிய, நடந்து கொள்ள வேண்டிய கருத்தினை வற்புறுத்துவதே அந்த அதிகாரத்தின் அங்கமாகும். ஒருவரின் உதவி பெறுபவர் பொதுவாக சிரமவாழ்வில் உள்ளவராகத்தான் இருக்க வேண்டும். திறமையிருந்திருக்கும். அத்திறமையை மதித்துப் பயன்படுத்த எவரும் முன்வராததால் மனது நொந்திருப்பர். இத்தகையவர்களைப் பார்த்ததும்—துணை செய்து உயர்த்திடவேண்டும் என்று நினைத்து ஆவனபுரிந்து, அவரை வாழ்விலே உயர்த்தி விடுகிறார். இப்படி உதவியால் உயர்ந்தவர்—அந்த நன்றியை மறவாது தனது உயர்ச்சியுற்ற அந்தப்புதிய வாழ்விலுங்கூட நடந்து கொள்ள வேண்டும். பழமையை மறக்கக்கூடாது என்பதே குறளின் கருத்து. பொதுவாக ஒருவன் கடுமையான நோயுடன் மரணப் படுக்கையிலிருந்து—பின் ஒருவாறு குணமடைந்து எழுந்துவிட்டால் அவனைப் பார்ப்பவர்கள் என்ன கூறுகிறார்கள்? "இவன் பிழைத்தது மறுபிறப்பப்பா!" என்றுதானே! அவன் என்ன உண்மையிலேயே இறந்துபோய் பிறந்தவனா? கிடையாது. இதுபோலவே ஒருவன் சாதாரணமாக இருந்துவிட்டு—வசதிபலபெற்று வாழத் தொடங்கும்போது "அவன் பழையவனில்லையா—புதிய ஆளையா!" என்று ஒரு பிறப்பை அவனுக்கு அளிப்பதையும் நாம் நாள்தோறும் கேட்டபடிதானிருக்கிறோம். அதை "எழுபிறப்பு" என்று கூறலாம்.

சாதாரணமாகப் பிறந்து, சாதாரணமாக வாழ்ந்து, உழைப்பால், திறமையால் நல்வாழ்வை ஒருவர் அடையும்போது—அந்த வாழ்வுக்கு அவரது திறமை, உழைப்பு இவை அடிப்படையாக இருந்து "எழுப்பிக் கொடுத்தது" என்பதைத்தான் "எழுபிறப்பு" என்றனர் திருவள்ளுவர். "எழுமை—உயர்ச்சி." தான் சிறுமையுற்றிருந்த காலத்தில் உதவியவர்களை உயர்ச்சியுற்ற நேரத்திலும் மறந்து விடாது நன்றி பாராட்ட வேண்டுமென்பதை வற்புறுத்துவதே அந்தக் குறளின் கருத்தாகும். அன்று நாம் துன்பம், தொல்லைகளுக்குள் சிக்கிச் சீரழிந்தது அவருக்குத் தெரியும். எனவே அவருடன் நட்போ, தொடர்போ, நன்றியோ காட்டக் கூடாது. அது, தனது பழைய நிலையை அறிந்தவராயிருப்பதால் தனக்கு அவமானம் என்று அறியாமையால் நினைப்பவர்கள் உண்டு. அப்படி நினைப்பது, நடப்பது தவறு என்பதை இடித்துக்கூறவே திருவள்ளுவர் அந்தக்குறளைச் செய்திருக்கிறார். ஆரியமோ, "சந்தடி சாக்கில் கந்தப்பொடி காலப்பணம்" என்ற நிலையில் தன் கைவரிசையைக் காட்டி "எழுபிறப்பையும்" கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

"துடைத்தவர்" என்றுதான் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அதன் பொருள், "முன்னாள் செய்தவர்" என்பதாகும். ஒருவன் உயர்ந்தபின் அவனுக்கு உதவுபவர்கள் பட்டியல் பெருகும். அது பயனுடையதில்லை. இல்லாதவனுக்கு இரங்கி உதவுவதே சிறப்பு! அதையும் திட்டவட்டமாகக் கூறவே "துடைத்தவர் நட்பு" என்கிறார். இதுவும் பண்பட்ட திருவள்ளுவப் புரட்சி!

"எழுமையெழுபிறப்பு" எனுங் குறளுக்கு கருத்து, "தங்கள் துன்பகாலத்தில் கூட நின்று துயர் துடைத்தவர்களது நட்பை, உயர்வடைந்து எழுச்சியுற்று எழுந்த புதியவாழ்வு வாழுங்காலத்திலும் மறவாது பாராட்டி நன்றியுடன் நடக்கவேண்டும்" என்பதேயாகும்.

"தேவர் அனையர் கயவர் அவருந்தா மேவன செய்தொழுகலான்" என்பது ஒரு குறட்பா. "கயமை" அதிகாரத்தில் இருக்கிறது. "தேவரும், கயவரும் ஒரு தன்மையர்; கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்து வாழ்தலால்" என்று பரிமேலழகரே கருத்துரை கூறுகிறார். கயமை, கீழ்மையான செயல்களைக் குறிப்பதாகும். அந்தக் கயமையோ தேவர்களுக்கு ஏகபோக உரிமையுடையதாம். 'கயமையே தேவர்' என்கிறார் திருவள்ளுவர். திரும்பத் திரும்பப்படியுங்கள்! தேவலோகத்தையும், தேவர்களையும்பற்றி உங்களிடையே உற்சாகமாகப் பெருமை பேசும் தக்காளிப்பழ தளதளப்பு மேனியர்களையும்—அவர்களுடைய வர்ணனைகளையும் நினையுங்கள்! அவர்கள் தேவர்களுக்குக் கூறுகிற பெருமை சிறப்புகளையும் சிந்தியுங்கள். அதன்பின் வள்ளுவப்பெருந்தகை தருகிற "கயமையே தேவர்" என்பதையும் ஒப்பிடுங்கள். முடிவுக்கு வாருங்கள். தேவேந்திரனின் செயல், நினைவு—தேவர்களது போக்கு, குணம் யாவையும் படம் பிடித்துப் பாருங்கள்! இத்தனைக்குப்பின் நீங்களே 'கயவர்' என்பதைவிட "தேவலோகத்துத் தேவர்" என்று திருவள்ளுவர் சூட்டியது சாலப் பொருந்துமென்ற முடிவுக்கு வந்தே தீருவீர்கள்! இத்துணை ஆணித்தரமாக இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பே எடுத்துக்கூறி மக்களை விழிப்புறச் செய்து ஆரியமாயையிலிருந்து விடுவிக்க முயன்றதுதான் திருவள்ளுவப் புரட்சி!

அதே பாதையில் இன்னல்களை இன்பமாக ஏற்று செயலாற்றி வரும் தி. மு. க. வின் பணி அத்தனையுமே திருவள்ளுவப் புரட்சி!

நுணுகி, நுணுகிக் குறட்பாக்களைப் பார்த்தால் புரட்சி வாடை கமழும்! வாய்ப்பும், ஓய்வும் கிடைக்கும் போதெல்லாம் திருவள்ளுவப் புரட்சியை உங்கள்பால் வீசச் செய்யும் தென்றல்.

விண்மீன்

நீலக்கட லிடையே--துள்ளி
நீந்திடும் மீன்களைப் போல்
நாலுதிசை முழுதும்--விண்மீன்
நல்லொளி காட்டு தடி!

சோலைப் பசுமையிலே--முல்லை
சொக்கழ கூட்டுதல் போல்
நீலநல் வானத்திலே--விண்மீன்
நிறையப் பூத்த தடி!

மோகனப் புன்னகையை--உயிர்
மொய்குழ லூட் டுதல்போல்
மேகத் திரையினிலே--விண்மீன்
மின்னி ஒளிரு தடி!

துன்பத் துயர் தனிலே--கவி
தோற்றிய காவி யங்கள்
இன்பம் நிறைத் திடல்போல்--விண்மீன்
எங்கும் எழுந்த தடி!

மங்கல வாழ்க்கை யினில்--உண்மை
மாசின் றிலங் குதல்போல்
எங்குமவ் வானத்திலே--விண்மீன்
ஏற்றுதடி ஒளியை!

வானத்துப் பெண்ணவள் தான்--நீல
வண்ணத்துச் சேலை கட்டி
மீனணி பூண்டு வந்தாள்--அழகு
மேன்மை சிறந்த தடி! —து. கோவிந்தன்

பிஞ்சுப் பகுதி

> ‘‘ பிஞ்சுப் பகுதி பிறந்தது தென்றலில் ;
> அஞ்சாக் கன்றுகள் ஆடும் அழகும்
> அறிவை உயர்த்த ஆக்கும் தொண்டும்
> நெறியிற் தவறுது நிறையும் ஆங்கே !
> தங்க மாதுளைச் செங்கனி பிளந்த,
> சிங்கக் குட்டிகள், சிரிப்பு வாழ்க !

ஆட்டுச் சிறுவனும் நாட்டு மந்திரியும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அந்தப் பட்டாளங்களுக்கு முன் டாங்கிகள் நிற்பதுபோல் ஆட்டு மந்தைகள் ஆங்காங்கு மேய்ந்துகொண்டிருந்தன. இவைகளை மனக் கண்ணுல் பார்த்தாலே, உடலெல்லாம் புல்லரித்து, உயிர் தித்திப் படைவதுபோல் இருக்கிறதல்லவா ? இவைகளை அப்படியே வைத்துக்கொண்டு, அந்த இடத்தில் நடந்த சம்பவத்திற்குப் போவோம்— வாருங்கள்.

அந்தச் சமவெளிப் பரப்பின் மத்தியில் ஒற்றை மரம் ஒன்று உயர்ந்து நின்றது. பார்ப்பதற்கு, மொட்டைத் தலையின் மத்தியில் தனித்திருக்கும் உச்சிக்குடுமிபோல் அசைந்தாடிக் காணப்பட்டது அம்மரம். அதன் கிளையிலிருந்து குழலோசை ஒன்று கிளம்பி, அந்த அமைதியான வெளியில் நிறைந்து கொண்டிருந்தது. அந்த இனிய ஓசையை நிரப்பியவன் உங்களைப்போல் ஒரு சிறுவன். ஆடுகளை மேய்க்கும் பொறுப்பாளி அவன். பெயர் நல்லான். மிகச் சுட்டியான பையன். இயற்கை அறிவு அதிகம் அவனுக்கு. யார் எதைச் சொன்னாலும் அஞ்சாமல் அதற்குப் பதில் பேசி வாதாடும் புத்தியுள்ளவன். அவனிடம் கிராமமக்களுக்கு ஓர் அலாதி ஆசை. ஆடுமாடுகளுக்கு அவனிடம் அதிக அன்பு, அடக்கம் எல்லாம்.

இந்தக் காட்சியையும் இப்படியே நிறுத்திவிட்டு, வேறு பக்கம் காணப்படும் அடர்ந்த ஒரு காட்டுக்குள் இப்போது நாம் போகவேண்டி யிருக்கின்றது. பயங்கரமான அந்தக் காட்டில், நாம் மேலே ஆரம்பித்த அந்த நாட்டு ராஜாவும், அவருடைய மந்திரியும் மிகவும் களைப்பாக அலைந்துகொண்டிருந்தார்கள். வேட்டைக்கு வந்தவர்கள். இவ்வளவு தூரம் இருவருமாய்விபரமின்றி வந்து சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் செவியில் நமது நல்லானின் குழலோசை புக ஆரம்பித்தது. அதன் இன்பத்தால், பசியும் சற்றுத் தணிந்துவிட, அந்த ஓசையோடு நடந்து, அம்மரத் தடிக்கு வந்து சேர்ந்தார்கள். நல்லானும் இறங்கினான் கீழே. மூவருக்குள்ளும் நடந்த பேச்சுக்களை நமது பாணியிலேயே கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதோடு, கதையில் நமக்கு வேண்டிய பகுதியும் முடிந்து, ஒரு சிறு கதையாக அமைந்துவிடும். இந்த ருசியான சம்பவத்தையும் நமது நல்லானின் சுய மதிப்பான பேச்சையும் படித்துவிடுங்கள்.

ராஜா :-தம்பி ! உன் பெயர் என்ன ? எந்த ஊர் ? இங்கு என்ன செய்கிறாய் ?

நல்லான் :-என் பெயர் நல்லான். ஊர்ப் பெயர் மயிலாடும் பாறை. ஆடு மேய்க்கிறேன்.

மந்திரி :-இவ்வளவு அருமையாகக் குழல் ஊதுகிறாயே, யார் உனக்குக் கற்றுக் கொடுத்தார்கள் ?

நல்லான் :-நாங்கள் கிராம மக்கள். ஏழைகள். எங்களுக்குக் கற்றுத் தரவேண்டுமென்ற அக்கறை நாட்டு ராஜாவுக்கே கிடையாதே, வேறு யார்தான் சொல்லித் தரப்போகிறார்கள் ?

மந்திரி :-ராஜாவையோ, அரசாங்கத்தையோ எதிர்பாராமல், நீ தானாக வளர்ந்ததும், கற்று அறிந்ததும் நல்லது தானே ?

நல்லான் :-நீங்கள் மந்திரி மாதிரி தந்தரமாகப் பேசுகின்றீர்கள். ராஜாவின் கடமையைப் பற்றி நான் பேசுகிறேன். என் திறமையைப் பற்றி நீங்கள் என் எதிரே வீண் முகஸ்துதி பேசி, அதை மறைக்கிறீர்களே !

(மந்திரியின் முகம் கறுமையாகிறது. அரசருக்கோ ஒரே பிரமிப்பு)

மந்திரி :-உனக்கு அரசாட்சியைப் பற்றி என்ன தெரியும்? ஒன்றும் புரியாத சிறுவன் இப்படிப் பொறுப்பில்லாமல் பேசுவது குற்றமல்லவா? இது அரசர் காதிலோ மந்திரி காதிலோ விழுந்தால் உனக்கு ஆபத்து வருமே தம்பி !

நல்லான் : - உள்ளதைச் சொன்னாலும்கூட தண்டனையென்றால் நீதியில்லாத நாடு என்று அர்த்தம். அதனால் அரசுக்குத் தான் கெடுதியே தவிர, என்னைப்போன்ற ஒன்றிரண்டு சாதாரண உயிர்களுக்கு ஏற்படும் தண்டனையா பெரிது ?

மந் : சரி தம்பி ! ராஜா காதில் இதெல்லாம் விழாது என்ற தைரியத்தில் தானே இப்படித் துணிவாகப் பேசுகிறாய் ?

நல் : கொஞ்ச நாளாக ராஜாவிடம் எனக்குப்பயமே உண்டாவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள்.

மந் : என்ன அவை ?

நல் : வழக்கமாக ராஜா அரச கொலு இருக்க வரும் போது, ‘‘ மந்திரி ! மாதம் மும்மாரிப் பெய்ததா ?’’ என்று அரச சபையை ஆரம்பிப்பாராம் !

மந் : ஆமாம் - அதுதான் பழைய முறை-அதில் தப்பு என்ன ?

நல் : ஓகோ - நீங்களும் அரண்மனைப் பள்ளிக்கூடந் தானா ? அதற்காக வீணே பழைய முறையென்று ஒரு உலுத்தக் காரணத்தைப் போட்டுக் கொள்வானேன் ? மழை பெய்தது கூடத் தெரியாமல் ராஜா என்ன, மாதம் முழுதும் அந்தப்புரத்தில் தூங்கிக் கொண்டிருந்தாரா ? அல்லது வேறு நாடு போயிருந்தாரா ?

சகி

(மந்திரி முகத்தில் கோபம்-அரசர் முகத்தில் அசடு.)

மந் : சரி ! மற்றொரு காரணத்தையும் சொல்.

நல் : இந்த ராஜாவுக்கு ஒரு தந்திரக்கார மந்திரி இருக்கிறாராம். அவர், கிராம மக்கள் முன்னேற்றம் அடையக் கூடாது என்றும், அடைந்தால், அடிமை வேலைக்கு ஆள் கிடைக்காது என்றும் கூறுகிறாராம். கிராமப் பிள்ளைகள் படிப்பைவிடக்குலத்தொழிலைத் தான் பயிலவேண்டுமென்றும்-பள்ளிகளை மூடிவிடும்படியும் உத்தரவு போட்டு விட்டாராம். பாருங்கள் அநியாயத்தை !

மந் : எல்லாரும்படித்தால், வேலை செய்வது யாரப்பா ?

நல் : அதனாலே...

மந் : சிலபேர் நாட்டை ஆள, நன்றாகப் படித்து அறிவாளியாவது அவசியம். அவர்களுக்கு அதுதான் முடியும். அந்த உரிமையை அவர்களுக்கும், வேலை செய்து, பழகிய உரிமையை மற்றவர்களுக்கும் கொடுத்தால் தானே நாட்டுக் காரியங்கள் சரிவர நடக்கும்.

நல் : இப்படிப் பேசுவதிலிருந்து நீங்கள் கூட அந்த ஆளும் இனத்தவர்போல் தெரிகிறது !

மந் : அப்படித்தான் இருக்கட்டுமே !

(நல்லான் முகத்தில் ஒரு குறும்புப் புன்முறுவல். ஆனால் அதோடு மௌனமாகி விட்டான். அவன் பதில் பேசாததைக் கண்டதும், மந்திரிக்குப் பெருமிதம், தான் வெற்றியடைந்ததில்-அரசருக்கும் ஒரு வகை ஆறுதல் தென்பட்டது.)

மந் : சரி தம்பி ! உண்மையை உணர்ந்து விட்டவரை நீ புத்திசாலி. நாங்கள் இருவரும் மிகக் களைப்பாக இருக்கிறோம். பசிவேறு ! ஆட்டுப் பால் கறந்து கொடுக்கிறாயா ?

நல் : கொடுப்பது முறையாகாதே ?

மந் : ஏன் ? எசமான் கோபிப்பாரா ?

நல் : ஆட்டு எசமானல்ல-நாட்டு எசமான்-ராஜா கோபிப்பார்.

மந் : ஏன் ?

நல் : அறிவை வளர்த்துக் கொள்ள உங்களுக்கு உரிமை, ஆகாரத்தைப் பெருக்க எங்களுக்கு உரிமை. இப்புதுச் சட்டப்படி நாங்கள் தேடும் ஆகாரத்தைச் சாப்பிட்டு உடல் வளர்க்க வேண்டுவது எங்களுக்குக் கடமை. எழுத்தையும் எண்ணையும் தின்று, மூளையையும் அறிவையும் பெருக்க வேண்டுவது உங்கள் கடமை. இதை இருவரில் யார் மீறினாலும் தப்பு. ஆகையால் நான் உங்களுக்கு உணவு அளிப்பது சட்டவியாக்கியானப்படி தப்பல்லவா ? அதற்கு வேறு எனக்குத் தண்டனை கிடைத்தாலும் கிடைக்கும். அதனால் பால் கிடையாது.

ராஜா : உயிர் போகிறதப்பா !

நல் : அறிவை விட உயிர் பெரிதல்ல. எங்கள் அறிவே பறிபோகும்போது......

(இத்துடன்வாதம் திடீரென நின்று விட்டது.)

ஆனால் மறுநாளே, அந்த மந்திரியைப் பதவிலிருந்து ராஜா விரட்டி விட்டதாகக் கேள்வி. நல்லானுக்குக் கூட அந்தப் புதிர் இன்னும் புரியாததாகவே யிருக்கிறதாம்.

கதை முடிந்தது தம்பிகளே!

★

வேண்டுகோள்

பிப்ரவரி முடிய, பல இடங்களுக்கும் சுற்றுப் பயணத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளேன். இப்போது ஒப்புக்கொண்டுள்ளவை தவிர, மற்ற இடங்களுக்கு வர இயலாத நிலையிலிருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடிதங்கள் எழுதியுள்ள நண்பர்கள் பலரும் இதையே பதிலாகக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்

பாலைவனக்குரல்

எங்கு நோக்கினாலும் ஒரே மணற் பரப்பு. பரந்தஅந்த மணல்வெளி யிலே உயிர்ப் பிராணி ஒன்றுமே யில்லை. சிற்சில இடங்களிலே சிறு சிறு குளங்கள், அவற்றின் ஆதர விலே சிற்சில ஈச்ச மரங்கள்-சில பெயர் தெரியாப் புற் பூண்டுகள். இப்படிப்பட்ட மணல் வெளி கற்பனை யைத் தூண்ட முடியுமா ? . கவிதை வெறி ஏற்ற முடியுமா ?

ஏன் முடியாது ?

மனிதன் தனக்கு எத்தனையோ கல் தொலைவிலுள்ள வான மண்ட லத்திலே மிதக்கும் வட்ட நிலவு பற்றியும், வைரக்கற்கள் போல மின்னும் விண் மீன்கள் பற்றியும் எழுதத் தெரிந்த நாளிலிருந்து இன்றுவரை எத்தனை அரிய கற் பனைகளை, கவிதைகளாகக் காவி யங்களாக எழுதிக் குவித்திருக் கிறான் ?

மனிதன் கற்பனையின் கூட்டுச் சேர்க்கை தானே ? கற்பனை வழியும் அவன் மனமின்றேல் அவன் மனி தனாக மதிக்கப் பட்டிருக்க முடி யாதே ?

பாலைவனமாக இருந்தா லென்ன ? மனிதப் பாதம் படாத பயங்கர வனமாக இருந்தால் தான் என்ன ? மூச்சு விடும் வாய்ப்பு இருக்கும் வரையிலே, அவன் எங் கிருந்தாலும், கற்பனையும், கவிதை வெறியும் அவன் மனதிலே நிழ லாடக் கூடவாவது செய்யுமே ?

இல்லாமலா 'நைஜாமி', லைலா மஜ்னூ எழுதினான். சோலையற்ற மண்ணிலே, பாலைவனப் பின்னணி யிலே மனிதன் என்றென்றும் மறக்க முடியாத காதல் காவி யத்தையல்லவா எழுதிவிட்டான் !

தென்றலே தடவாத பூமியிலே தேன் மொழி லைலாவை உலவ விட்டு, தடாக மற்ற தரையிலே கயசை நடமாட விட்டு, அவன் சொல்லி வைத்துப் போன கதை, எங்கே பிறந்தது ? பாலைவனத் திலே !

அகத்துறைத் தலைவன் - தலைவி கள் பொழிலிடை உலவிப் புன லிடை மூழ்கிப் பெற்ற இன்பத்தை விட, வரண்ட மண்ணிலே, கூடாரச் சரிவிலே, 'ஒயசிஸ்' ஓரத்திலே அந்தப் பெர்சியக் காதலர்கள் பேரின்பம் கண்டார்களே ! எப்படி?

கற்பனையால் — இதயத் துடிப் பால் — இன்பக் காவியத்தால், நைஜாமி காட்டியதால் தானே ! அந்த இறந்தும் இறவாதவன் எங் கிருந்து அந்த அழியாக் காவியத் தைக் கற்பனை செய்தான் ?

அரை நிலா ஆடிவரும் அழகை, பகலின் சூட்டைத் தணித்துக் குளிர்ந்த பாலைவன மணலின் மேலிருந்தல்லவா கற்பனை செய் தான் !

என் செய்தான் ?

காதலை மட்டுந்தானா அவனது அந்தக் காவியத்திலே காண்கிறோம் இல்லை. இல்லவே இல்லை !

ஏற்றத்தாழ்வு மனப் பான்மை யுள்ள ஒரு பிடிவாதக் காரத் தந்தை—எந்த மண்ணிலே காதல் செய்து, எந்த நிலவிலே மனங் கவர்ந்தாளோடு ஆடி, இன்பச் சிலை யாகப் பெற்றானோ . ஒரு மகளை-அந் தத் தந்தை—தன் அன்பு மகளின் அகங்கவர்ந்தவனை அவள் அடையா வண்ணம் தடுத்தான்.

அவன் காதலுக்கு அணி செய்து, வமிசத்தின் வாரிசாக ஒரு அழகு மகளை அவனுக் களித்த அவன் மனைவி அலற; பெற்றமகள், மன திலே வரித்து விட்டவனே தன் வாழ்வுத் துணைவன் என வலி யுறுத்தி அழ; திரண்ட செல்வத் திற்கு ஆசைப்பட்டு மகளை இன்னொ ருவன் மனைவியாக்கினான். விளைவு?

கண்ணீர்க் கடலிலே மிதந்த வண்ணம் காதலனை விட்டுப் பிரிந் தாலும், அவள் இதயத்தில் இணைந்து விட்ட காதலனின் ஓவி யத்தை எவராலும் எடுத்தெறிய முடியவில்லை !

அவனோ பிரிந்துவிட்ட காதலியை எண்ணி எண்ணிப் பித்தனாகிப் போனான். பாலைவன மெல்லாம் பரிதாபப்படும் வகையில் அழுது கதறினான். முடிவு ? காதலர் இரு வரும் கூடினர் !

எப்படி ?

இரா. சு.

தங்கப்பழம்

எந்த அந்தஸ்து பேதம் அவர் கள் உடல்களைப் பிரித்ததோ, அது இனி எப்போதும் தடுக்க முடியாத வகையில், சமூகத்தைப் பிணமாக ஆக்கிவிட்டுப் பிணமாகவே இரு வரும் இணைந்தார்கள்.

அந்தப் பிரிக்க முடியாத சந் திப்பை ஏற்படுத்திய நைஜாமி சொல்லாமல், என்ன சொல்கிறான் தெரியுமா ?

" அடபாவிகளே! மனம் என்பது எதனாலும் கட்டுப் படுத்த முடியாத ஒன்று. உங்களுடைய முரட்டுப்பிடி வாதத்தால் கட்டுப்படுத்த நினைத் தால் முடிவு இதுதான்! அவர்கள் செத்துத்தான் போனார்கள். அதே சமயத்தில் உங்களை நடமாடும் பிணங்களாக ஆக்கிவிட்டேசெத்தார் கள். இதை நீங்கள் மறுக்க முடி யுமா?"

இப்படி உரத்த குரலிலல்லவா நைஜாமி கேட்கிறான் ?

அந்தக் குரல்—பாலைவனக் குரல் காலத்தையும் தாண்டி, தூரத்தை யும் தாவிஉங்கள் காதுகளில் வந்து ஒலிக்க வில்லையா ?

மனிதன் என்ற எவன் காதிலும் அது ஒலிக்கத்தான் செய்யும்—மன தில் உரைக்கத்தான் செய்யும்!

லைலா—மஜ்னூ வெறும் காதல் இலக்கியம் மட்டுமல்ல.

லைலாவும் கயசும் இணையத் துடித்து இடையே இருந்த தடைச் சுவற்றைக் கண்டு பெரு மூச்சுவிட் டார்களே, அதில் காதல் வெப்பம் மட்டுமா இருந்தது ? நைஜாமி அதைத்தானா அங்கு சுட்டிக் காட்டி னான் ! நிச்சயமாக இல்லை !

நிறைவேறாத ஆசையால் துடித் தாலும், இருவரும் இணைந்து விட முடியும் என்ற நம்பிக்கையில் உயிர் வாழ்ந்து, பிணமான பின் னும் இணைந்தார்களே அந்த வெற்றி—இலட்சிய வெறி—கதை யல்லவா நைஜாமி சொல்கிறான் !

படை பல வரினும், தடை பல நேரினும், நெஞ்சத்துக் கனவை நனவாக்கப் பித்தனானாலும் வாழ்ந்து முடிப்பேன் — பிரிந்தா லும் கூடுவேன் என்றோ நெஞ்சுரத் தைக் காதல் மெருகேற்றியல்லவா, தந்திருக்கிறான் !

கொண்ட கொள்கையிலே வெற்றி காண எதையும் தாங்கும் இதயம் இலட்சியவாதிகளுக்கு உண்டு என்பதையல்லவா, சூசக மாகச் சொல்லுகிறான் !

அந்தப் பாலைவனக் குரலின் பொருளை லைலா-மஜ்னூவின் உண் மைக் கருத்தை இங்குள்ள கிதோப தேசிகள் இந்தப் புதுக் கண்ணோட் டத்தில் பார்க்கட்டும்.

சக்ரவர்த்தித் திருமகன்கள் புராணங்களில் புதுமை காணாமல் இத்தகைய உள முருக்கும் காதல் காவியங்களில் இலட்சியப் படிப் பினையைக் காணட்டும்.

★

சென்னையில்

திராவிடர் திருநாள்

மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியிலாழ்ந்தது

14-1-55 வெள்ளியன்று சென்னைமாவட்ட தி. மு. கழகத் தினரால் சென்னை எழும்பூரில் திராவிடர் திருநாள் விழா, முன் னாள் சென்னைமாவட்ட செயலா ளர் திரு. K. கோவிந்தசாமி தலைமையில் மிகச்சிறப்பாக நடந் தேறியது. லட்சத்திற்கு மேற் பட்ட மக்கள் விழாவில் கலந்து கொண்டனர். மாலை 3-மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் துவங்கி 6-மணிக்கு முடிவுற்றது. அனை வரும் ஆவலுடன் எதிர்பார்த் திருந்த சொற்பொழிவாளர் களின் கயிறு இழுப்புச் சண்டை பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்று--நடிகமணி நாரா யணசாமி குழுவினர் வெற்றி பெற்றனர்--எழும்பூரில் மிக ரம்மியமாக அமைக்கப்பட் டிருந்த கலை அரங்கில் தோழியர் இசைக்குயில் செல்வா அவர் களும் இசைமுரசு நாகூர் அனிபா அவர்களும் இசைவிருந்து அளித் தனர். இடையே குழந்தை களின் சித்திரப்போட்டியில், இந்திராணியும், அழகுப் போட்டி யில், முத்துமாணிக்கமும், பரிசு பெற்றனர். கிளைக்கழகங்களின் நாடகப்போட்டியில் 10-வது வட்ட சார்பில் சிறுவர் சிறுமியர் களால் நடத்தப்பட்ட "குடும்பத் திலே ஒருநாள்" என்ற நாடக மும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அண்ணா அவர்களால் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் அண்ணா அவர்கள் விழா நடத் திய சென்னைமாவட்ட கழகத் தைப் பாராட்டிப் பேசினர். மாவட்ட செயலாளர் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

நாங்கள் கேட்கிறோம் நீங்கள் சொல்லுங்கள்

கேள்வி 1

" 'இடுக்கண்' என்ற வார்த்தை, திருக்குற ளில் எத்தனை இடங்களில் வந்துள்ளது ? "

பதில் அனுப்பவேண்டிய முகவரி :

"நா. கே., நீ. சொ."
'தென்றல்'
சென்னை-6.

முடிவு தேதி
5-2-55

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 2

ஈற்றடி: "என்றும் இளமை இவர்க்கு"

முடிவு தேதி 5-2-55

முகவரி :
நீதிபதி 'சகி'
'தென்றல்'
2-127, மௌண்ட்ரோடு,
சென்னை-6.

முதற்போட்டியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாக்கள் 29-1-55 இதழில் வரும்!

ஒவ்வொரு இடமாக தீப்பந்தம் பிடித்தபடி தேடினர். அந்த அமைதியான நேரத்தில், கீழ்மாளிகைக்குள் கிடந்த இடைதுறையானுக்கு அவர்களின் காலடி ஓசை கேட்டது. மூச்சைக்கூட இறுக்கிப் பிடித்துக்கொண்டு கிடந்தான். ஒரு வீரன், கீழ்மாளிகைக் கதவின் மேற்பகுதியைப் பார்த்துவிட்டான்.

"அண்ணே! இதோ ஒருபெட்டி புதைந்து கிடக்கண்ணே!" என்றான், மெதுவாக.

இது இடைதுறையானுக்கு சுத்தமாகக் கேட்டது. அவன் உயிரே நின்றுவிடும்போ லிருந்தது. கதவின் உட்பகுதியைத் தாளிட்டிருந்தானாயினும், இப்போது, தன் கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மேலே வீரர்கள், அது பெட்டியென்றே கருதித் தோண்ட ஆரம்பித்தார்கள். இந்த நேரத்தில் ஒருவன் ஒரு யோசனை சொன்னான்.

"அண்ணே! பெட்டி ஒருவேளை பெரிசாயிருந்தாலும் இருக்கும். அதனாலே, மூடியை உடைத்துப் பார்த்திடுவோம்!"

இப்போது இடைதுறையான், "செத்தோம்" என்கிற முடிவுக்கே வந்துவிட்டான். கடைசி காலத்தில் ஏற்படுகிற அசாதாரண துணிச்சல் அவனுக்கு ஏற்பட்டது. படபடவென்று உள்ளே இறங்கினான். கைக்குக் கிடைத்ததெல்லாம் தூக்கினான். ஒரு ஆசனத்திலிருந்து கிழித்துப் போடப்பட்ட உறை அவன் கைக்குக் கிடைத்தது. அதை அப்படியே தலையில் மாட்டிக்கொண்டான். மேலே, வீரர்கள், மூடியை உடைப்பதற்கான ஆயத்தம் செய்துகொண்டிருந்தனர். இடைதுறையான், படாரென்று கதவைத் திறந்து, "ஆய்! எய்! ஹூ! ஹீ!" என்று பயங்கரச் சப்தங்களோடு பூமிக்குத் தாவினான். வீரர்கள், நடுங்கிக் கூச்சல் போட்டவாறு ஓட ஆரம்பித்தனர். இடைதுறையான் விடவில்லை.

"பேய் அண்ணே! பிசாசண்ணே!" என்று வீரர்கள் குளறியபடி ஓடினர். இடைதுறையான் ஒரு தீப்பந்தத்தை பிடுங்கிக்கொண்டான்! தொண்டை இடங்கொடுத்த மட்டும் கத்தினான்.

ஒரு வீரன், "ஐயோ! தலையில்லாப் பிசாசண்ணே! கொள்ளிக் கண்ணு அண்ணே!" என்று கூவியதும், எல்லா வீரர்களும் மறைந்து கொள்ள ஆரம்பித்தனர்.

இடைதுறையான், 'தப்பினோம்' என்று பறக்க ஆரம்பித்தான்.

வீரர்கள் 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டனர். ஒரு வீரன் மட்டும், "அரிசங்கமனுக்கும் வேறே வேலை இல்லை. நம்ம உசிரை வாங்குறாரு. குடுக்கிற பொன்னெமட்டும் சரியாக் குடுக்கமாட்டேங்குறாரு. நாம் இவ்வளவு அவதிப்பட வேண்டிருக்கு" என்று சலித்துக்கொண்டான்.

★

மலாட்டுப் பகுதியிலே இறங்கிய மங்கையும் மற்றையோரும் கூடாரங்களில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். நந்தினி, தந்தச்சிலை பூமியில் கிடத்தப்பட்டிருப்பதுபோல் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது கூடாரத்திற்குப் பக்கத்தில், நடனமங்கை ஒருத்தியும் ஒரு வீரனும் பேசிக் கொண்டிருந்தனர். சிரிப்பும் கூத்துமாக அந்த இருவரும் உல்லாசமாக இருந்தனர். கண்ணயரும் எண்ணமே அவர்களுக்குஇல்லை. குறுஞ் சிரிப்பு, பெருஞ் சிரிப்பு எல்லாம் வந்து வந்து போய்க்கொண்டிருந்தன. 'இச்'சென்ற ஒலியோ, இச்சை தீர்க்கும் எண்ணமோ இல்லாமல் வெறும் பேச்சிலேயே இருவரும் வெகுநேரம் இருந்தனர். இந்தச் சளசளப்பினால், உள்ளே உறங்கிக்கொண்டிருந்த நந்தினியின் தூக்கம் கலைந்தது. மெதுவாக, கண்களைத் துடைத்தபடி எழுந்து வெளியில் வந்தாள். வீரனின் மடியிலே நடனமங்கை சாய்ந்தபடி இருப்பதைக் கண்டாள். ஒதுங்கி நின்று "யாரங்கே!" என்று குரல் கொடுத்தாள். இருவரும் பயந்து எழுந்து ஓடி வந்தனர்.

என்ன நினைத்தோ, நந்தினி, "கொஞ்சம்மெதுவாகப்பேசுங்கள்." என்று கூறிவிட்டு மீண்டும் உள்ளே சென்றுவிட்டாள். இருவரும்மெல்ல நடந்தபடி அந்த இடத்தை விட்டே அகன்றுவிட்டனர்.

உள்ளே சென்ற நந்தினி தளநாயகனின் நினைவு மீண்டும் வரப் பெற்றாள். உறக்கம் வரவில்லை. படுத்துப் படுத்துப் புரண்டாள். பிறகு, இதயத்தைக் கஷ்டப்பட்டு மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

★

அதே நேரத்தில், ஆலங்காட்டுப் பகுதியிலிருந்து விடுபட்ட இடைதுறையான் பித்தனைப்போல், கால் போன போக்கில் போய்க்கொண்டிருந்தான். களைப்பு மேலிட்டது. ஒரு படிக்கட்டுத் தென்பட்டது, அவன் கண்களுக்கு. அதை நோக்கி நடந்தான். அது ஒரு குளம். அங்கே வந்து சேர்ந்தான் இடைதுறையான். அவன் கண்களில் கண்ணீர் பொங்கிப் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. மன்னாதி மன்னன்! மஞ்சத்தில் துயின்றோன்! தாதியர்கள் கால்பிடிக்க, தளிர்க்கொடிகள் அருகிருக்க, காலும் தலையும் பெண்களின் மடியில் இருக்க வாழ்ந்த சுகபோகி, படிக்கட்டில் அப்படியே கட்டையெனச் சாய்ந்தான். வழிந்த கண்ணீரைத் துடைக்கவும் மாட்டாமல், கண்களை மூடிக்கொண்டான். உறக்கம் சிறிது நேரத்திற்கு அவனது இன்னல்களை மூடிவைத்துக் கொண்டது.

★

அங்கே...

நந்தினி தூங்கிக்கொண்டிருந்த கூடாரத்திற்குள், ஒரு உருவம் மெல்ல மெல்ல நுழைந்தது. மினுக்கிட்டுக்கொண்டிருந்த தீப வெளிச்சத்தில், கோடி சூரிய ஒளியோடு இயங்கிக்கொண்டிருந்த நந்தினியின் முகத்தை, அது கூர்ந்து கவனித்தது. கழுத்திலிருந்தபடியே மார்பில் புரளும் மணிவடமும், மூச்சால் விம்மித் தாழும் மார்பகத்தின் மீது அது விளையாடுவதும், கருவிழிகளை மூடிக்கொண்டிருக்கும் இமைகளின்மீது, சிறுவியர்வு அரும்பிக் கிடப்பதும்,நெற்றியிலேஅந்தவியர்வு முத்துக்கள்போல சரங்கோர்த்துநிற்பதும், ஒருக்கச் சாய்ந்து படுத்து, இடது கையை நேராக நீட்டிவைத்தபடி அவள் இருக்கும் அழகும், அந்தக் கைகளிலே தாங்களும் துயில்வதுபோல சரிந்து கிடக்கும் வளையல்களும், மேலாடைக்கும் சேலைக்கட்டுக்கும் இடையிலே உள்ள மேனியின் வெண்மை, கண்ணாடி போல் பிரதிபலிப்பதும், பாதத்திலே பூசப்பட்டிருந்த செம்பஞ்சுக் குழம்பின் நேர்த்தியும், தண்டை; "நான் பாக்கியசாலி" என்றுசொல்லிக்கொண்டிருப்பதும்அந்தவெளிச்சத்தில், அந்த உருவத்திற்கு நன்றாகத் தெரிந்தன.

"இதுநாள்வரை, மங்கைதான் பேரழகி என்று கருதினோம்; இல்லை! இவளே அழகின் தலைவி' ஆகா! பார்த்தால் பசிதீரும்!" என்று அந்த உருவம் நினைத்தது.

வெகுநேரம் அந்த உருவம் அப்படியே நின்றது. விடிகின்ற நேரம் படிகின்றது என்பதற்கு அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன.

அந்த உருவம் என்ன நினைத்ததோ என்னவோ, தாளமுடியாத உணர்ச்சியோடு, நந்தினியின் கன்னத்தில் மாறி மாறி முத்தங்கள் பொழிந்தது. எடுத்து, அப்படியே அவளை அணைத்துக்கொண்டது. கட்டித் தழுவியது. நந்தினி விழித்துக் கதறினாள்! அவள் சப்தம் கேட்டு, எல்லா வீரர்களும் விழித்துவிட்டனர். அந்த உருவம் மட்டும் நந்தினியை விடவில்லை.

"அடப்பாவி! சண்டாளா!" என்று நந்தினி கூவினாள்.

(தொடரும்)

அடுத்த இதழ் முதல் தொடர் கதை, அதிக பக்கங்கள் வெளி வரும்.

மலர் மணம்

ஆசிரியர் அவர்கட்கு,

பொங்கல் நன்னாளில் பூச்சிரிப்பு த் தவழும் தங்கள் 'தென்றல்' கண்டேன். தென்றல் தந்த சுவை, பொங்கல் தந்த சுவையுடன் போட்டியிட்டது.

'தமிழ் இனம்' பற்றி இராசமாணிக்கத்தின் ஆராய்ச்சி உரையும், இராமாயணம் பற்றிய அப்பாத்துரையின் கட்டுரையும் உயர்ந்தவை; ஊன்றிப் படிக்கத் தக்கவை.

கவிதைகள் அனைத்தும் கற்கண்டுகள். விளம்பரங்கள்கூட விலை மதிக்க இயலா கவிதைத் தொகுப்புக்கள். வாணிதாசனின் 'பரிதி செயல்' பாடிப்பாடிப் பரவச மடையச் செய்கிறது. கலைஞர் கருணாநிதியின் கருத்துரை கருத்தைப் பிணைக்கிறது. என் சொல்ல... ஒவ்வொன்றும் ஒளி வீசும் முத்துக்கள்...வாழ்க தென்றல்!

நா. வேம்பு
செந்துறை—17-1-55

★

நிர்வாகி அவர்களுக்கு,

இந்த ஆண்டு பொங்கல் மலரைக் கண்டதுமே நான் வியப்புற்றேன். நான் எதிர்பார்த்ததைவிட மலர் நன்கு அமையப் பெற்றது. இதழில் கண்ணதாசனின் "பாஞ்சாலி சபதமும்" கா. அப்பாத்துரையாரின் ராமாயணம்பற்றி மலையாள அறிஞர்கள் ஆராய்ச்சியும், டாக்டர் இராஜமாணிக்கனார் "தமிழ் இன"மும் எல்லோராலும் போற்றப்படுமென்றும், நினைக்கிறேன்.

ஏ. வி. தவசியப்பன்
கவுந்தப்பாடி—14-1-55

★

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

தென்றல் பிரியன் எழுதும் செய்தி. ஐயா, நான் அண்ணாமலை பல்கலைக்கழகத்து மாணவன். நான் தென்றல் பொங்கல் மலருக்காக நெல்லிக்குப்பத்தில் ஒரு ஏஜண்டிடம் முன்பணம் கொடுத்தேன். ஆனால் அவர் என்னை ஏமாற்றிவிட்டார். வந்ததையெல்லாம் இரகசியமாக கொடுத்துவிட்டு. பாருங்கள் அவர் ஒழுக்கத்தை. வரவில்லை என்று அவர் சொன்னதை நம்பி உங்கள்மேல் வருத்தப்பட்டேன். தீரவிசாரித்ததில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது. ஆதலினால் தாங்களும் என்னை ஏமாற்றாது ஒரு பொங்கல் மலர் தந்துதவும்படி கோருகிறேன். இருக்கிறது என்று கடிதம் கண்டவுடன் பணம் அனுப்புகிறேன். பணமாகவா, தபால் பில்லைகளாகவா என்பதை எழுதவும். ஏமாற்றமாட்டீர்கள் என்று உறுதியுடன் எழுதுகிறேன்.

க. பார்த்தசாரதி
அண்ணாமலைநகர்—18-1-55

★

தை முதல் நாளாம் இன்று காலை "திராவிடநாடு" கிடைத்தும் எங்கே தென்றல்? எங்கே தென்றல்? என்று தேடினேன். அந்தக்களைப்பில் மாலையில் தீண்டினேன். உடனே ஓர்இன்பம். உள்ளம் துள்ளிக்குதித்தது. உடல் சிலிர்த்தது. மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. ஆனால் தென்றலைத் தீண்டுவதற்கு கொடுத்த சிரமமும் **விலையும்** அதிகமே என்பதைக்கூறாமல் முடியவில்லை. அடுத்த தென்றலர(மலரா)வது உழைப்பாளியின் வீட்டைத் தட்டுமாறு செய்தல் நலம்.

குறிப்பு:—மலர் கிடைக்காமல் அலைந்து கடைசியில் ஒருரூபாய் கொடுத்து வாங்கினேன். காரணம் தேவைக்கேற்ற மலர் வரவில்லை என்று தெரிகிறது.

S. முனியப்பன்
மதுரை—14-1-55

★

அன்புள்ள

திரு. கண்ணதாசன் அவர்களுக்கு, "தென்றல்," பொங்கல் மலர் கண்டேன். குறைந்த விலையில் சிறந்த முறையில், பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகளுடன் அனுப்பமுடியும் என்பதற்கு தென்றல் ஒரு எடுத்துக்காட்டு.

இரா. சந்திரன்
உதகை—18-1-55

★

தோழர் கவிஞர் கண்ணதாசன் அவர்கட்கு. மலர் கிடைத்தது மகிழ்ச்சி. எழில்மிக்க இன்பமாக தென்றல் இருந்ததைக் கண்டேன்; இறுமாந்தேன். வாழ்க! வளர்க தென்றல்!

வாணிதாசன்
கடலூர்—16-1-55

★

அன்புமிக்க உயர் திரு. ஆசிரியர் அவர்கட்கு எங்கள் பணிவும் அன்பும் கலந்த வணக்கங்கள் உரியதாகுக. தென்றல் பொங்கல் மலருக்கு நாங்கள் ஒரு வாரம் முன்னதாகவே விற்பனைக்காரர்களிடம் பணம் கொடுத்து பதிவு செய்துக் கொண்டிருந்தோம். ஆனால் எங்களில் யாருக்குமே மலர் கிடைக்கவில்லை. தங்கள் கண்ணியம் மிக்க ஏஜண்டு தென்றல் பொங்கல் மலரை வாடிக்கையாகப் போடும் விற்பனையாளர்களுக்கு இதழ் கொடுக்கவே இல்லை. அதனால் விற்பனையாளர்கள் எங்கட்கு இதழ் கொடுக்க இயலவில்லை. நாங்கள் பொங்கல் நன்னாளில் தென்றலை எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாந்தோம். உங்கள் ஏஜண்டு தானே அத்தனை இதழ்களையும் தனிப்பட்ட முறையில் அதிகலாபம் கருதி விற்பனை செய்துள்ளார். அதனால் அவருக்கு அறிமுகமாகாத எங்களைப்போன்ற வாசகர்கள் தென்றலைப் பெற இயலவில்லை. ஏஜண்டுகள் கொள்கைக்காகப் பணியாற்றுவதா? அன்றி லாபத்திற்கா? இது நேர்மையா?

திராவிடநாடு, மன்றம், கிளர்ச்சி, தனி அரசு அத்தனை இதழ்களையும் பெற்றோம். அவைகளின் ஏஜண்டுகள் தங்கள் ஏஜண்டைப் பின்பற்றுததற்காக உண்மையில் மகிழ்கிறோம். ஆனால் அதேபோது தங்கள் ஏஜண்டு செய்த நல்ல காரியத்திற்காக வருந்தாமலிருக்க இயலவில்லை.

ஒரு கடையில் முரசொலி 2-8-0 ரூபாய்க்கு விற்றிருக்கிறார் அதன் விற்பனையாளர். இப்படி விற்பனையாளர்கள் செய்தால் வாசகர்கள் எப்படி இதழ்களைப் பெற இயலும்.

தாங்கள் தங்கள் இதழுக்கு கட்சி பற்றுள்ள ஒருவருக்கு, கொள்கையிலே உறுதியுள்ள ஒருவருக்கு இங்கு ஒரு கழகத்தின் ஆதரவு பெற்ற ஒருவருக்கு கழகத்தின் மூலமே அளித்தல் சிறந்தது எனக் கருதுகிறோம். அப்போது தான் வாசகர்கள் தவறாது இதழ் பெற முடியும்.

எங்களுக்கு 10 இதழ் பொங்கல் மலர் கட்டாயம் நீங்கள் அனுப்பித்தீர வேண்டும். பதில் கண்டபின் பணம் அனுப்புகிறோம், இதழ் பிறகு அனுபவும். நாங்கள் இன்றுவரை தேடாத கடையில்லை. இல்லை என்று சொல்லாத விற்பனையாளர்கள் இல்லை. உண்மையில் எங்களுக்கு வருத்தம் இல்லாமல் இல்லை. தங்கள் ஏஜண்டுகள் திருந்துவார்களா? தெளிவுறுவார்களா? பிழைகாணின் பொறுத்தருள்க. நன்றி.

அன்பர்கள்

1) ஆ செயராமன்
2) கோ. நா. மூர்த்தி
3) க. சுப்பய்யா
4) ச. அன்னியப்பன்
5) க. கோவிந்தராசு
6) M. K. சீனிவாசன்
7) M. பாஷா
8) T. நடராஜன்
9) வீரபாலி
10) அ. சண்முகம்
11) கோ. கிருட்டிணன்
12) நா. குப்புசாமி
13) து. நந்திகேசவன்
14) ராமசந்திரன்
15. A. பரசுராமன்

மக்கள் முன்னேற்றக் கழகம்
பெங்களூர் சிடி.—17-1-55

அன்புடையீர்!

வணக்கம். இயற்கையின் எழிலோவியத்தை அட்டைப் படமாகக் கொண்ட 'தென்றல்' பொங்கல் மலர் கண்டேன். முதல் தரமான கவிதைகளும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறந்த கட்டுரைகளும் மலரில் இடம் பெற்றிருக்கின்றன. மலர் அருமையாக இருக்கிறது.

ஆர். எஸ். சம்பந்தம்
மதராஸ்—16-1-55

★

அன்புள்ள கண்ணதாசன் அவர்கட்கு, வணக்கம்.

நேற்றைய தினம் தங்களது "தென்றல்" பொங்கல் மலரைக் கண்ணுற்றேன். களி கூர்ந்தேன். ஆனால் மலர் எனக்கு எதிர்பாராத முறையில் ஒரு பெரிய ஏமாற்றத்தையே அளித்தது. எப்படியெனில், எட்டணா தானே மலரின் விலை? எளிய முறையில் தான் இருக்கும் என எண்ணினேன். ஆனால் நேரில் பார்த்த பிறகோ... ......? இம் மலருக்கு எட்டணா மட்டுமல்ல. எட்டு வெண் பொற் காசுகள் கூட அளிக்கலாம்.

இத்துணை சிறந்தமுறையில் மலரை வெளியிட்ட தங்கட்கு எனது உளங்கனிந்த நன்றி. இப்பொங்கல் திருநாளிலே தங்கட்கு எனது அன்பான வாழ்த்துகள்.

பெ. தமிழ்ச் செல்வன்
புதுக்கோட்டை—14-1-55

என் நன்றி

பொங்கல் வாழ்த்து அனுப்பிய தோழர்கட்கு என் அன்பும் நன்றியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வாணிதாசன்
[புரட்சியகம்]
சேலியமேடு, கடலூர் N.T.

இலக்கிய வளர்ச்சிக்கு
தென்றல்
வழங்கும்
ரூ 2000

பெருங்கதைப்போட்டி
காவியப்போட்டி
நாடகப்போட்டி
இலக்கியச்சுவைப்போட்டி

விபரங்களுக்கு:

தென்றல் :: சென்னை-6.

பர்மியத் தலைநகரில் பயங்கரக் கொலை!

7

பின்னர் ஸ்டெனுகிராப்பர் மவுங் எதிரி தரப்பு வக்கீல் ஊசான்வினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். இவரது விசாரணை 11-30க்கு முடிவுற்றதும் அப்ரூவர் பாஞூன் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் போது பாஞூன் தனக்கும் ஊசோவிற்கும் தொடர்பு ஏற்பட்ட விதத்தையும் தான் மியூச்சிட் கட்சியில் சேர்ந்த விதத்தையும் சொன்னார். 18-7-47ல் ஊசோவைத் தான் சந்தித்ததாகவும், 'நாளை மந்திரிமார்கள் கூட்டம் நடைபெறும் போது, அவுன்சான் முதல் மற்ற மந்திரிமார்களைச் சுட்டுக் கொல்ல ஏற்பாடு செய்துள்ளேன்: நீ தக்கின் நூவை அவரது அறைக்குப் போய், வந்திருக்கிறாரா என்று பார்; வந்திருந்தால் சுட்டுக் கொன்று விடு'' என்று ஊசோ தன்னிடம் சொன்னதாகவும் தெரிவித்தார். மறு நாள் தக்கின்நூ வரவில்லை என்றும், ஏனைய எதிரிகளில் சிலர் செக்ரட்டேரியட்டிற்குச் சென்றதாகவும், சென்ற சிறிது நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சப்தம்கேட்டதாகவும் சொன்னார். விஷயம் சி. ஐ. டி. போலீஸ் மூலம் தெரிந்து பகல் 2 மணிக்கு ஊசோவின் வீட்டை போலீசார் வளைத்துக் கொண்டு எல்லா எதிரிகளையும் கைது செய்தனர் என்றும் சொன்னார்.

20-10-47 ல்5 ம் நாள் விசாரணை நடை பெற்றது. பாஞூன் அன்றும் விசாரிக்கப் பட்டார். நீதிபதி பாஞூனை விசாரித்த பொழுது பாஞூன் சதித்திட்டம் உருவான விதம் முழுவதையும் சொனனார். அதன் பின்னர் மிஸ்டர் வெர்ட்டானஸ் பாஞூனைகுறுக்குவிசாரணை செய்தார். அடுத்து குற்றவாளிகளில் ஒருவனான கின்மவுன்யீன் பாஞூனைச்சில கேள்விகள்கேட்டார். பாஞூன் பதில் சொல்லி முடித்ததும், கொலை நடந்த நேரத்தில் செக்ரட்டேரியட்டிற்குச் சென்றிருந்த கிமேந்தான் ஊடின்போ விசாரிக்கப்பட்டார். யார் யார் எவ்வெவ் வித துப்பாக்கிக் கண்கள் கொண்டு வந்தனர் என்பதை ஊடின்போ சொன்னார். அதன் பின்னர் விசாரிக்கப்பட்ட மவுன்டின் மவுன் என்ற சாட்சியும் அதே பதிலைத் தந்தார்.

21-10-47ல் 6ம் நாள் விசாரணை ஆரம்பமாயிற்று. மந்திரிமார்கள் கூட்டம் நடக்கும் அறையைக் காவல் செய்யும் மவுன் தன் செய்ன் விசாரிக்கப்பட்டான். மந்திரி சபைக்குள் வந்தவர்கள் எல்லோரையும் தன்னால் அடையாளம் காட்ட முடியாவிடினும், தன்னைத் துப்பாக்கியைக் கொண்டு பயமுறுத்தியவனைக் காட்ட முடியும் என்று சொன்னான். அதன் படியே தேட் நீயை சுட்டிக் காட்டினான். அடுத்து, பத்திரிகை நிருபர் மவுன்தான் விசாரிக்கப்பட்டார். அவரும் கொட்டுவேயைச் சுட்டவன் என்று யான்ஜீ அவுங்கை சுட்டிக்காட்டினார். பின், இவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பிற்பாடு கர்னல் சோலினுடைய அறையின் காவலாளி ஒன்மவுங், போக்கு வரத்துப் போலீஸ் மவுண்டுவே, சி. ஐ. டி. அலுவலகர் ஊபோசெய்ன், மவுசெய்ன்கலே ஆகியோர் விசாரிக்கப்பட்டனர்.

22-10-47 ல் 7 ம் நாள் விசாரணை நடை பெற்றது. மவுசெய்ன்கலே குறுக்குவிசாரணை செய்யப்பட்டான். அதன் பின்னர், 'தமாடி' பத்திரிகையின் கேஷியர் மவுன் செய் மவுங், சூருவளிப் படையைச் சேர்ந்த அவில்தார் மீனைங் இருவரும் விசாரிக்கப்பட்டு, பின்னர் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டனர்.

23-10-47ல் 8ம் நாள் விசாரணை நடைப் பெற்றது. சூருவளிப் படையைச் சேர்ந்த மவுன் சோத்தெய்ன் உடன்சேர்ந்துதண்ணீருள்சோதனையிட்ட மவுன்டின்மவுன், சூருவளிப் படைத் தலைவர் 'போசோத்தவுன், சி. ஐ. டி இன்ஸ்பெக்டர் சான்சிங், எஸ். ஐ. பி மவுந்தெய்ன், டவுன் லாக்கப் அதிகாரி ஊமவுங் மவுங், இரகசிய இலாக்கா பாடசாலை பிரின்ஸிபால் ஊலாபே, முதலியோர் விசராணை செய்யப்பட்டனர். மவுந்தெய்ன் தவிர ஏனையவர் குறுக்கு விசராணைசெய்யப்பட்டனர்.

28-10-47 அன்று 9ம் நாள் விசாரணை ஆரம்பமாயிற்று. முந்திய நாள் விசாரணை செய்யப்பட்ட ஊலாபே மீண்டும் விசாரணைசெய்யப்பட்டார். கொலை சம்பந்தமான குண்டுகளின் பல புகைப்படங்களைக் காட்டினார். பின்னர் 31 வது சாட்சியாக சி. ஐ. டி ஆபீசர் கொச்சோசெய்ன் விசாரிக்கப்பட்டார். மிஸ்டர் வெர்ட்டானஸ் இவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

29-10-47ல் 10ம் நாள் விசாரணை நடை பெற்றது. முதலில் லெப்டினென்ட் கோல்சன் விசாரிக்கப்பட்டார். இரங்கூன் மூன்றாவது அடிசனல் மாஜிஸ்ட்ரேட் ஊ அவுன்சின, இரங்கூன் கிழக்கு சப்டிவிசனல் மாஜிஸ்ட்ரேட் ஊலோச்சாஇருவரும் விசாரிக்கப்பட்டனர். ஊஅவுன் சீன் மட்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பின், குற்றவாளிகள் கொடுத்த வாக்கு மூலங்கள் வரிசைக் கிரமமாக வாசித்துக் காண்பிக்கப்பட்டன. யான்ஜீ அவுங், தூகா,செய்ன்ஜீ, மவுநீ, சின்மவுன் யீன், மொவுன்ஜீ, தேட்நீ ஆகியோரது வாக்கு மூலங்களில், அவர்கள், மந்திரிமார்களைக் கொலை செய்யத் திட்டம் தீட்டிய விபரம், கொலை செய்த விபரம் ஆகியவை கண்டிருந்தன.

30-10-47ல் 11ம் நாள் விசாரணை நடைபெற்றது. முதலில் இன்சீன் ஸ்பெஷல் பவர் மாஜிஸ்ட்ரேட் ஊபாச்சைன் விசாரிக்கப்பட்டார். அவர், தான் ஊசோவின் வீட்டில் சோதனையிட்டபோது என்னென்ன இடைத்தது என்பதை விவரமாகச் சொன்னார். பிறகு கர்னல் ஊடேன்லா அவுங், டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் சி. ஐ. டி விசாரிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பின்னர் கான் விசாரிக்கப்பட்டார். கான் கொலை சம்பந்தமாகத் தனக்குத் தெரிந்த விபரங்களைச் சொன்னார்.

31-10-47 அன்று 12வது நாள் விசாரணை நடை பெற்றது. மந்திரிமார்களின்பிணங்களைப்பரிசோதனை செய்தவரும் இரங்கூன் ஜெனரல் ஆஸ்பத்திரி போலீஸ் சர்ஜனுமான டாக்டர் பாத்தான் விசாரிக்கப்பட்டார். விசாரணையின் போது, அவுங்சான், தக்கின்மியா, ஊபா, மானபைக்கன், ரஜாக், ஒன்மவுங் ஐ. சி. எஸ், டிட்டோஊபாச்சோ, கொட்டுவே, சோபுவாஜீ ஆகியோரின் பிரேதங்களில் இருந்த குண்டு பட்ட காயங்களின் விபரத்தைத் தந்தார். இவரைக் குறுக்குவிசாரணை செய்யவில்லை. பின்னர் அசிஸ்டெண்ட் சர்ஜன் ஜே. டட்டா, இன்சீன் டாக்டர் ஊசுவே, டாக்டர் பாத்தான், கிளார்க் ஊச்சிட், பியூன் டீன்லைங் மவுன்டின் மின், மிஸ்டர் பாஸ்கோ, கொலாட்டின் முதலியோர் விசாரணை செய்யப்பட்டனர்.

3-11-47 அன்று 13வது நாள் விசாரணை நடை பெற்றது. முதன் முதல் ஊபாயே என்பவர் விசாரிக்கப்பட்டார். அடுத்து டிபுடி போலீஸ் சூப்ரண்டெண்ட் ஊத் தெய்ன் விசாரிக்கப்பட்டார்- மிஸ்டர் வெர்ட்டானஸ் ஊத்தெய்ன் ஓவை குறுக்கு விசாரணை செய்தார். குறுக்கு விசாரணை முடிந்ததும் அட்வகேட் ஜெனரல், நீதிபதியவர்களிடம், இக்கொலை வழக்கு சம்பந்தமாக குற்றவாளிகள் செய்ன்ஜீ, தூகா, கின்மவுன் யீன், மவுநீ, யான்ஜிஅவுங், அப்ரூவர் பாஞூன் ஆகியவர்களின் வாக்கு மூலங்கள் ஒத்திருப்பதால், இனிமேல் விசாரணை செய்ய வேண்டியதில்லை என்று நினைப்பதாகச் சொன்னார். வெர்ட்டானஸ், தான் அப்ரூவரின் வாக்கு மூலத்தை உடனே பார்க்க வேண்டும் என்று சொன்னார். மறு நாள் காலை 10 மணிக்குத் தான் அது கிடைக்குமென்று சொல்லப்பட்டது.

4-11-47ல் 14வதுநாள் விசாரணை ஆரம்பமாயிற்று. முதல் நாள் சொன்னபடி அப்ரூவர் பாஞூனின் வாக்கு மூல ஸ்டேட்மெண்டை, போலீஸ் சூப்ரன்டெண்ட் நீதிபதியிடம் சமர்ப்பித்தார். நீதிபதி விவாதத்தை ஆரம்பிக்கலாமென்று மிஸ்டர் வெர்ட்டானஸிடம் சொன்னார். வெர்ட்டானஸ், அப்ரூவர்தான் தந்த இரு வாக்கு மூலங்களில் ஒன்றிற் கொன்று முரணாகச் சொல்லியிருப்பதாகவும், அதனால் அவர் அப்ரூவரல்ல, குற்றவாளிதான் என்றும் சொன்னார். பின்னர் நீதிபதி ஊசோ மீது குற்றப் பத்திரிகை வாசித்தார். 'பர்மா கவர்னரின் நிர்வாக சபை மந்திரிமார்களைக் கொலை செய்த குற்றத்திற்காகவும், தக்கின் நூவைக் கொலை செய்ய முயற்சித்த தற்காகவும், பாக்கைன் என்ற மந்திரியைக் கொலை செய்யச் சதியாலோசனை செய்ததற்காகவும், முறையே பினல் கோடு 302—120பி, 120(பி), 302—109 செக்ஷன் படி, குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.' ஊசோதான் குற்றவாளி ஆக மாட்டேன் என்று சொன்னார்- மவுன்சோ, தேட் நீ, யான்ஜீ அவுங், ஆகிய மூவரும் தாங்கள் குற்றவாளிகள் அல்லரென்றும், செய்ன்ஜீ மட்டும், ''இது நடந்தது எல்லாம்உண்மை, ஆனால் யாவும் ஊசோவினுடைய தூண்டுதலால் செய்தோம் ஆகையால் நான் குற்றவாளியாக மாட்டேன்'' என்றும் சொன்னார்கள்.

17-11-47 அன்று 15வது நாள் விசாரணை நடைபெற்றது. ஊசோ மிக்க மனச்சோர்வு உள்ளவராகக் காணப்பட்டார். நீதிபதி, மிஸ்டர் வெர்ட்டானஸை லண்டனிலிருந்து வரும் வக்கீல் பற்றிய விபரத்தைக் கேட்டார். லண்டனுக்குத் தந்தி கொடுத்திருப்பதாகவும், பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும், 10 நாள் தவணை தரவேண்டுமென்றும் சொன்னார். லண்டனிலிருந்து அப்போது தந்தி வந்தது. லண்டன் லாயர் 29-11-47ல் பர்மா வந்து சேருவார் என்று கண்டிருந்தது தந்தியில். நீதிபதி தவணை கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம் என்று கூறி விட்டார்.

(தொடரும்)

தென்றல்
திரை

பிப்ரவரி முதல் தேதியன்று வெளிவருகிறது!

இது - தென்றல் தரும் ஏடு!
இது - திரைவானில் ஒரு பூக்காடு!
இது - தித்திக்கும் செய்தி தரும் தேன்கூடு!
இது - கண்ணைக் கவரும் கலை வீடு!

விலை அணா நான்கு

ஏஜன்ஸி வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு எட்டணா வீதம் டெப்பாசிட் கட்டிப் பதிவு செய்துகொள்க.

-: விபரங்களுக்கு :-

நிர்வாகி—தென்றல் கன்சர்ன்ஸ்
சென்னை-6.

சீதை நெறி தவறியவள்! ஏன்?

மாமேருவெனத் தோன்றி பேரிடியென நாட்டில் உள்ளோர் உள்ளங்களிலே விழுந்து கலக்கியிருக்கிறது இந்தக்கேள்வி? பாமரர்கள் ஒரே பரபரப்பு அடைகின்றார்கள். பண்டிதர்களும் புலவர்களும் வித்வான்களும் சிரோமணிகளும் திகைக்கின்றார்கள், திணறுகின்றார்கள். பாகவதர்களும் புராணிகர்களும் பதைபதைக்கின்றார்கள். கைகளைப் பிசைந்து கொள்கின்றார்கள்.

இந்தக்கேள்வி ஏன் மறுபடியும் உயிர்த்தெழுந்திருக்கிறது? அன்று அறிஞர் அண்ணாவிடம் புறமுதுகிட்டோடியவர்கள், இன்று ஆச்சாரியார் தலைமையில் சல்லடம் கட்டுகின்றார்களே ஏன்? சண்டைக்கு அழைக்கின்றார்களே எப்படி? இதில் ஏதேனும் சூட்சுமம் புதைந்திருக்கின்றதா? நாட்டிலே நடமாடும் நல்லவர்களின் இதயங்களிலே எழும் நியாயமான கேள்வி இது.

ஆம். அன்பர்களே! சூட்சுமம் மட்டுமல்ல, சூதும் கலந்திருக்கின்றது. அரசியல் களத்திலே நம்மால் முறியடிக்கப்பட்டு புறமுதுகிட்டோடிய ஆச்சாரியார் களத்தை காலி செய்துவிட்டு, கணக்கைத் தீர்த்துக்கொண்டு, காகுத்தன் காதையைக் கையில் ஏந்திய வண்ணம் கிளம்பியிருக்கின்றார்.

நாட்டிலே நல்லொளி பரப்பும் பகுத்தறிவுப் பகலவனை மதமெனும் குடைகொண்டு மறைத்திடலாம் என இந்தக் குல்லூகபட்டர் மனப்பால் குடித்த வண்ணம் புறப்பட்டுவிட்டார். முடியுமா அவரால்? அவசியமற்ற கேள்வி. பின் ஏன் கிளம்பியிருக்கின்றார். அங்கே தான் மறைந்திருக்கிறது சூட்சுமம்! ஆம். கோத்திரத்திற்குரிய குணம் எங்கே போகும்?

தசரதன் மைந்தன் கதையை பரப்புவதன் மூலம், தாசர்கள் பெருகுவர் எனத் தப்புக்கணக்குப் போட்டிருக்கின்றார். அதன் காரணமாக கிளம்பிவிட்டார் களத்திற்கு. ஆச்சாரியார் இராமாயணம் படித்திருக்கின்றார். கரைத்துக் குடித்திருக்கின்றார் என்பதற்கு இதுவே சான்று. ஆம்! நேருக்கு நேர் நின்று எதிர்க்க முடியாத இராமன் மரத்தின்பின் நின்று கணையைச் செலுத்தி வாலியின் உயிரைக்

கவர்ந்ததை நன்றாக ஊன்றிப் படித்திருக்கின்றார். மாஜி கவர்னர் ஜெனரலின் மனம் சிந்திக்காமலா போயிருக்கும்? காகுத்தன் கதையைக் கையில் தாங்கிய வண்ணம் களத்திற்குக் கிளம்பிவிட்டார். சூட்சுமம் புரிந்திருக்கும் என எண்ணுகின்றேன். எனவே விளக்கம் தேவைப்படவில்லை.

சில தினங்களுக்கு முன் திருச்சியிலே பெரியார் பேசியிருக்கிறார். சீதை நெறி தவறியவள் எனக் கூறியிருக்கின்றார். உடனே கூட்டத்தில் இருந்த பார்ப்பனத் தோழரொருவர் பதைபதைத்திருக்கின்றார். எழுந்து ‘பொய்! பொய்!’ என பெருங்குரல் எழுப்பியிருக்கின்றார்.

எது பொய்? பெரியார் பேசியது பொய்யா? அண்ணா வாதிட்டது பொய்யா? பகுத்தறிவியக்கம் பரப்பிவரும் மெய் பொய்யா? அல்லது ஆச்சாரியாரும் அவரது சீடகோடிகளும் இராமனையும் சீதையையும் அவதாரமாகப் பிரச்சாரம் செய்வது பொய்யா? எது பொய்? கம்பனுக்கும் துளசிதாசனுக்கும் மூலமாகவிளங்கிய வால்மீகி விளக்குகின்றார் யார்பொய்யர்கள் என்று!

முதலில் நாம் நெறிதவறிய சீதையைக்காண்போம். பின்னர் முறை தவறிய இராமனைச் சந்திப்போம்.

பஞ்சமா பாதகங்களில் ஒன்றானதும், அறிவுடையோர்களால் விலக்கப்பட்டதும், நெறியுடையோரால் முறை தவறியது என விலக்கப்பட்டதுமான மதுவை, இராமனும், இலக்குவனும் பெண்ணாகிய சீதையும் பன்முறை அருந்தியிருக்கின்றார்கள். வால்மீகியும் இதை பல இடங்களில் கூறியிருக்கின்றார்.

தந்தையால் காட்டிற்கு அனுப்பப்பட்ட இராமன், சீதையோடும், இலக்குவனோடும் பரத்துவாச முனிவரின் ஆசிரமத்தை அடைகின்றான். பரத்துவாசர் அவர்களை வரவேற்று உபசரிக்கின்றார். முற்றும் துறந்த முனிவரின் குடிலிலே வரவேற்பு நடக்கின்றது. கடும் விரதங்களைக் கடைபிடித்து, ஐம்புலன்களையும் அடக்கித்தவம்புரியும் தவசியின் குடிலிலே விருந்து நடைபெறுகின்றது. அதுவும் மதுவுடன் கூடிய விருந்து!

அயோத்தியா காண்டம். 54 வது சருக்கம். 14வது சுலோகம்.

“அந்த ஞானவானாகிய சக்ரவர்த்தியின் திருக்குமாரரின் திருவாக்கிற்கு திருச்செவி சாற்றியருளிய புண்யாத்மாவானவர் உடனே **மதுவர்க்கத்தையும்**, தீர்த்தத்தோடு கூடிய அர்க்கியமென்பதையும் சமர்ப்பித்தருளினார்.

இன்னொரு சான்று. அசோக வனத்திலே சீதையைக்கண்ட அனுமன் இராமனின் நிலையை எடுத்துக் கூறுகின்றான்.

சருக்கம் 36. சுலோகம் 41. சுந்தரகாண்டம்.

“உன்னைப் பிரிந்ததுமுதல் இராமன் **மாம்சத்தையாவது மதுவையாவது** அருந்துவதில்லை.”

மது அருந்துவதில்லையாமே! அடாடா என்ன பரித்தியாகம். பரவாயில்லை. மனைவியைப் பிரிந்த பின்னராவது கள்ளுண்ணாமல் இருக்கின்றான் இராமன். இதை வட்டியுடன் தீர்க்கும் வகையில், இராமன் அயோத்தி திரும்பி அரசனானபின் காதலியுடன் குடித்துக் களித்திருக்கின்றான். அந்தப்புரம் செல்கின்றான். சீதையைக் காண்கின்றான். உடனே தனது திருக்கரங்களினால், **மைரேயகம** என்னும் மதுவையூற்றி சீதைக்கு அளித்திருக்கின்றான். அவளும் அருந்துகிறாள்.

உத்தரகாண்டம். சருக்கம் 42. சுலோகம் 7.

‘‘காகுத்தர், இந்திரன் இந்திராணியை எவ்வண்ணமோ அவ்வண்ணமே சீதையைக் கையால் பற்றிக்கொண்டு **புண்ணியம் தருகிறதும்**, இனிப்பாக இருக்கின்றதுமான **மைரேயகம்** என்னும் மதுவைப் பருகச்செய்தார்.’’

மது புண்ணியம் தருகிறதாமே! அதை ராமன் அருந்தியிருக்கிறார். சீதையை அருந்தச் செய்திருக்கின்றார். ஆனால் இராமராஜ்யம் நடத்துகின்றோம் என்று சொல்லும் காந்தி பக்தர்கள் ஆட்சியில் மதுவிலக்கு! மது அருந்துபவன் மதியிழந்தவன், என காந்தியடிகள் கூறியிருக்கின்றார். அங்ஙனமாகில் அவதாரங்களான இராமனும் சீதையும்?

‘‘உள்ளொற்றி யுள்ளூர்
நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள் ளொற்றிக் கண்சாய் பவர்’’
—என

வள்ளுவப்பெருந்தகை, கள்ளுண்போரை எள்ளி நகையாடிய இந்தத் திருவிடத்திலே, கண்டகண்ட இடங்களிலே, அரண்மனையிலும் ஆசிரமங்களிலும், மதுவையுண்டு மதியிழந்து தடுமாறிய சீதையையும் இராமனையும் கடவுளராகக் கொள்ளவேண்டும் என்ற பிரச்சாரம் நடக்கின்றது. மேலும் வாஸ்து ஹோமம் என்ற பெயரில் காட்டுமிருகங்களை வேட்டையாடி உண்டு களித்திருக்கின்றனர். இதற்குப் பல சான்றுகள் இராமாயணம் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. அண்மையில் ஆச்சாரியாரும் இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இவ்விதம் கள்ளுண்டு காட்டுமிராண்டிக்கோலத்தில் முறைவரையற்று நடந்து கொண்ட இராமனும் சீதையுமா நமக்கு இலட்சிய வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்!

இன்னும் சீதையின் குணக்கேடுகளையும் நெறி தவறிய வாழ்க்கையையும் அடுத்தடுத்து வால்மீகி எடுத்துக் காட்டுகின்றார்.

இனி, ஆரண்யகாண்டத்திற்குச் செல்வோம். அங்கு இராவணன் சீதையைக் கவர்ந்துசெல்லஎண்ணி மாரீசனுடன் வந்து மறைந்திருக்கும் கட்டம். ஆசிரமத்தின் எதிரே சிறிது தூரத்தில் மாரீசன் மானுருவம் கொண்டு உலவுகின்றான். சீதை மானைக் கண்டதும் மனமயக்கம் கொண்டு பிடித்துத் தரும்படி இராமனை வேண்டுகின்றாள். அப்பொழுது இலக்குவன் மாயமான் அது, நம்பாதீர் என எச்சரிக்கின்றான். சீதை பிடிவாதம் செய்கின்றாள். இராமனும் புறப்பட்டுச் செல்கின்றான். இலக்குவனிடம் தான் திரும்பும்வரை சீதையை விட்டு அகலாது இருக்கும்படி கட்டளையிட்டுச் செல்கின்றான்.

மாரீசமான் மாயமாக மறைந்து விரைந்து செல்கிறது. இராமனும் ஆவேசமுடன் விரட்டிச் செல்கின்றான். பர்ணசாலையை விட்டு விலகி வெகுதூரம் வந்துவிட்டார்கள். இராமனின் சினம் அளவு மீறுகிறது. ஆத்திரத்தால் தூண்டப்பட்டு அம்பெய்கிறான். பாணத்தால் அடிபட்ட மான் மரண ஓலமிடுகிறது. ஐயோ சீதா! ஐயோ இலட்சுமணா! என மாரீசன் கூச்சலிட்டவனாய் மரிக்கின்றான். திடுக்கிட்ட இராமன் விரைந்து சென்று மாமிசத்தைப் பிரித்து தோலைமட்டும் எடுத்துக்கொண்டு வேகமாகத் திரும்புகின்றான்.

இதற்குள்பர்ண சாலையில்இருந்த இருவரின் காதிலும் இந்த ஓலம் விழுகின்றது. பதை பதைத்த சீதை இலக்குவனை விரைந்து சென்று உதவிபுரியும்படி வேண்டுகின்றாள். இலக்குவன் இராமனின் கட்டளையை எண்ணி அகலாது இருக்கின்றான்.

இதைக் கண்ணுற்ற அம்மையாரின் மனதிலே விபரீதமான எண்ணங்கள் தோன்றுகின்றன. உயர் குலத்தில், உதித்த மங்கையின் உள்ளத்திலே, தோன்றக்கூடாத சந்தேகங்கள் சீதைக்கு எழுகின்றன. இலக்குவனை நோக்கி, வாய்க்கு வந்தவாறு ஏசுகின்றாள். என்ன பேசுவது, எவ்வாறு வார்த்தைகளை வீசுவது என்ற முறை, வரை இல்லாது சீதை கூறுகிறாள்.

சருக்கம் 45 சுலோகம் 5 முதல் 8 வரை. (ஆரண்யகாண்டம்)

‘‘லக்ஷ்மணரே! . நீர் தமையனாருக்குத் துணைபுரிபவனாய் நடிக்கும் சத்ருபோலவே இருக்கிறீர். அத்தகைய நீர் இந்த இக்கட்டான நிலையிலும் தமையனாரிடம் செல்லாது இருக்கின்றீர். 5

ப. நெடுமாறன்

லக்ஷ்மணரே! என்னை உத்தேசித்தே ஸ்ரீராமரை மாண்டுபோகும்படியாய் நீர் நினைக்கின்றீர். என் மீது ஆசையால்தான் ஸ்ரீராமரை தேடிச் செல்லாது இருக்கின்றீர். 6

“இந்த ஆபத்து உமக்கு இஷ்டமானதாய் எண்ணுகின்றேன். தமையனாரிடம் பற்றென்பதே உமக்கு இல்லை. அதனால் மகா தேஸஸ்வியாகும் அவரைக் கவனியாதவராய், மனம் பதறாதவராய் நிற்கின்றீர். 7

‘‘நீர் எவரை உத்தேசித்தவராய் வந்தீரோ, அவரே இப்பொழுது ஆபத்தில் சிக்கிக் கிடக்கையில் என்னால் இங்கு இருந்துகொண்டு செய்ய வேண்டிய காரியம் என்ன இருக்கும். 8

இந்தத் தகாத வார்த்தைகளைக் கேட்ட இலக்குவன் இடியோசையுண்ட நாகமென நடுங்கி, இராமனை வெல்லக் கூடியவர் யாருமே இவ்வுலகில் இல்லை. மாரீசனால் நடத்தப்பட்ட மாயநாடகம் இது. எனவே தங்களைத் தன்னந்தனியாக விட்டுச்செல்ல மாட்டேன்- இராமன் வெற்றியோடு திரும்பு

தமிழர் மன்றம்
இலவசப்படிப்பகம்
பம்மல்
பல்லாவரம்
23-1-55 மாலை 5 மணிக்கு
பம்மலில்
அறிஞர் அண்ணா
அவர்கள் பேசுவார்கள்.

வார். இது உறுதி எனக் கூறுகின்றுன். இங்ஙனம் அவன் ஏறத்தாழ 9 சுலோகங்களைக் கூறி, பலவித நியாயங்களை எடுத்துக் காட்டி தேறுதல் கூறுகின்றுன்.

அன்பன் பேசப் பேச அம்மையாரின் சினம் பொங்குகின்றது. சினத்தோடு பின்வருமாறு கூறுகின்றுள்.

"அற்பனே, நீசத்தொழிலில் துணிந்துவிட்டவனே, இரக்கமற்றவனே, குலப்பெருமையை குலேக்க வந்தவனே, ஸ்ரீராமரது பெருங் கஷ்டத்தை உனக்கு சம்மதமானதாக நான் நினைக்கின்றேன்.

சுலோகம் 20

ஸ்ரீராமரது இக்கட்டை அறிந்து, அதனுல் இவற்றை பிதற்றுகின்றனை.

சுலோகம் 21

"லக்ஷ்மணு எக்காலத்திலும் ரகசியத்தில் தீங்கு புரிபவர்களும் இரக்கமற்றவர்களும், சத்ருக்களுமாகிய உன்போன்றவர்களிடத்தில் எது உண்டாகுமோ இது ஆச்சரியமன்று"

சுலோகம் 22

"பரம துஷ்டனுன நீ, பொய்யடிமை பூண்டவனுய், என்னை உத்தேசித்தோ அல்லது பரதனுல் நியமிக்கப்பட்டோ, காட்டில் தனிமையாய் வந்த ஸ்ரீராமரை, பின்பற்றி வருகின்றனை"

சுலோகம் 23

"சுமித்ரையின் புதல்வனே, உன்னுடையதோ பரதனுடையதோ அந்த எண்ணம் நிறைவேருது. கருநெய்தல்போல சியாமள வர்ணமுடையவரும் செந்தாமரைக் கண்ணருமான ஸ்ரீராமரை கணவராக அடைந்து, அற்ப மனிதனை எங்ஙனம் மதிப்பேன்."

சுலோகம் 24

அடாத சொற்களை விடாது பேசிய சீதையை நோக்கி இலக்குவன், பெண்மை பேதைமை யுடையது என்னும் சொல்லிற்கு ஏற்ப பேசிவிட்டாய். நேர்மையற்ற குற்றம் சுமத்தப்பட்டேன். நான் குற்றமற்றவன் என்பதற்கு வனவாசிகள் அனைவரும் சாட்சி. என்னை நீ சந்தேகிக்கும்காரணத்தால், இப்பொழுதே போகிறேன். இராமனேடு திரும்பி வந்தால், உன்னை மீண்டும் சந்திக்கிறேன் எனக் கூறுகின்றுன்.

இதைக் கேட்ட சீதை கண்ணீர் பெருக்கியவளாய் கண்டிப்பான குரலில் கூறுகின்றுள்.

"லக்ஷ்மணு ஸ்ரீராமரைப் பிரிந்து கஷ்டதசையில் எனது உடலை ஒழிப்பேன். கோதாவரியில் விழுந்துவிடுவேன். இல்லையென்றுல் சுருக்கிட்டுக் கொள்வேன். சுலோகம். 35

கொடிய விஷத்தையாவது குடிப்பேன். அல்லது தீயில் விழுவேன். நான் மட்டும் ஸ்ரீராமரைத் தவிர மற்றொரு மனிதனை காலாலும் தீண்டேன். சுலோகம். 36

இங்ஙனம் சீதைகூறிவிட்டு, வயிற்றில் அடித்துக்கொண்டு அழுகிறுள். மனேவேதனை பொறுக்கமாட்டாமல் இலக்குவன் செல்லுகின்றுன்.

பதிவிரதைகளில் சிறந்தவள் என்றும், மகாலட்சுமியின் மறுபிறப்பென்றும் பெண்ணின் நல்லாள் எனவும், ஏற்றிப் போற்றித் தொழப்பட்டு, நமது பெண்களால் முன்மாதிரியாகவைத்து பின்பற்றப்படவேண்டும் எனக் கூறப்படும் சனகன்பெற்ற திருமகள், தசரதன்தன் மருமகள், காகுத்தன் கைப்பிடித்த காரிகை, கேவலம், பகுத்தறியும் ஆற்றலற்ற பெண்ணும், கல்வியறிவற்ற காட்டுக் கன்னியும், சந்து முனைச் சிந்துபாடும் சிங்காரியும், பேசக் கூசும் இழிமொழிகளை வீசியிருக்கிறுள்.

அரண்மனை வாசத்தை விட்டு ஆசிரமத்திற்குப் பின் தொடர்ந்தவனும் தன் மனைவி, தனது தாய், தனது உடன்பிறந்தான் என்ற பந்தபாசங்களை, சொந்தச் சுகங்களை அறுத்தெறிந்துவிட்டு அண்ணனைப் பின் தொடர்ந்து காடேகியவனும், இரவும் பகலும் இராமனைப் பிரியாது உடனிருந்து தோளோடு தோள் கொடுத்து களம் பல கண்டவனும் அண்ணனின் சேவையைத் தணியாத தாகமாகக் கொண்ட தன்னலமற்ற இலக்குவன், சீதையிடம் பெற்ற பரிசில்கள் இவை.

தமையனுருக்கு சத்ருவே
அண்ணிமீது ஆசைகொண்டவனே,

அற்பனே!
இரக்கமற்றவனே
நீசத்தொழிலில் துணிந்துவிட்டவனே.
குலப்பெருமையை குலேக்கவந்தவனே.
இரகசியத்தில் தீங்கு புரிபவனே.
இரக்கமற்ற சத்ருவே
பரமதுஷ்டனே
பொய்யடிமை பூண்டவனே
பரதனுல் நியமிக்கப்பட்டவனே,
என்னை உத்தேசித்தவனே.
அற்ப மனிதனே!

"கேளாக் காதினரே! கேட்டீர்களா சீதையின் பவளவாய் உதிர்த்த பொன்மொழிகளை? கணவனின் உடன் பிறந்தானை, அல்லும் பகலும் அனவரதமும் தங்கள்தொண்டிலேயே தனது வாழ்வை செலவிட்டு வரும் இலக்குவனை, நேர்மையற்ற குற்றத்தால், தகுதியற்ற சொற்களைக் கொட்டித் திட்டுகிறுள்.இக்கொடிய சொற்களைக் கேட்ட இலக்குவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! அண்ணன் இட்டுச் சென்றிருக்கும் ஆக்ஞைக்கு அஞ்சுவானு,அல்லது அண்ணி சுமத்தும் அவதூறுக்கு அஞ்சுவானு. பாம்பிற்குப் பால் வார்த்தவன் அது படமெடுத்துப் பாய்ந்து கொத்த வருவதைப் பார்த்துக் கலங்குவதுபோல இலக்குவன் கலங்கினுன். மனம் வெறுத்தவனுய் அவ்விடத்தைவிட்டு அகலுகின்றுன்.

பின்னர் மாயயோகி வேடத்தில் இராவணன் நெருங்கிவந்து சீதையால் உபசரிக்கப் பெறுகின்றுன். பின் தனது வேடத்தை அகற்றிய இராவணன் வந்த காரியத்தைக் கூறி சீதையைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்கின்றுன். வழியில் எதிர்த்த ஜடாயுவை வென்றுவிட்டு, ஆகாய மார்க்கத்தில் சீதையை மடியில் இருத்தியவனுய் செல்கின்றுன். இராவணன் மடியில் அமர்ந்திருந்த சீதை அழுது புலம்பியவளாய் தனது நகைகளைகழற்றி எறிகின்றுளாம்.

வழியில் ஒரு மலைச் சிகரத்தில் சுக்ரீவனையும் அனுமானையும் காண்கின்றுள். உடனே தனது மேலாடையை அகற்றி ஆபரணங்களை முடிந்துஎறிகின்றுள்.

சருக்கம். 54. சுலோகம் 1, 2 ஆரண்ய காண்டம்.

திருடிக்கொண்டு போகப்படும் ஜானகியும் காப்பவர் ஒருவரையும் காணுதவளாய், ஒருமலைச்சிகரத்தில், ஐந்து வானரோத்தமர்களைக் கண்டாள். 1

அகன்ற கண்களையுடைய ஸ்திரீ இரத்தினமாகும் ஜானகி சிறந்த ஆபரணங்களைப் பொன்னிறமுள்ள பட்டு **மேலாடையில்** பொதிந்து ஸ்ரீராமருக்கு அறிவிப்பார்கள் என்று அதனுல் அவர்கள் மத்தியில் எறிந்தாள். 2

மற்றொரு ஆடவன் மடியில் அமர்ந்தவண்ணம் மேலாடையை கழற்றி எறியும் மானங்கெட்ட செயலைச் சீதை செய்திருக்கிறுள். கேட்கவே அருவருப்பும் ஆபாசமும் தோன்றும். இந்தக் கதைகளை நமது தாய்மார்கள படிக்கவேண்டும் எனப் பாகவதர்களும் புராணிகர்களும் ஆச்சாரியார் தலைமையில் கூடி முழங்குகிறுர்களே! அவர்களை என்னவென்று அழைப்பது?

இனி இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டு சென்று தனது செல்வ வளங்களையெல்லாம் காட்டி ஆசை வார்த்தைகளைக் கொட்டிச் சீதையை மயக்க முயலுகின்றுன். அப்பொழுது சீதை கூறுகிறுள்.

சருக்கம். 56 சுலோகம். 17

ராக்ஷஸப் பதரே! என்னைத் **தொட்டமையால்** உனக்கும் அரக்கர்களுக்கும் உனது அந்தப்புர ஸ்திரீ சமூகத்திற்கும் நாசத்தின் பொருட்டு அழிவுகாலம் வந்துவிட்டது-

சுலோகம். 22

இராக்ஷஸா! அறிவு அவருக்கு அர்ப்பணமாகி அதனுல் ஜடமாகி இருக்கின்ற இந்த சரீரத்தைக் கைதியாக அடைத்துவை. தின்னவாவது தின்றுவிடு. உயிரை வைத்திரேன். **இந்தச் சரீரத்தைப் பற்றி எனக்கு ஆவது என்ன?**

இராவணன் சீதையைத் தொடவில்லை என வாதிக்கும் கம்பரடிப்பொடி ஆழ்வார்கள் இதற்கு என்ன பதில் கூறுவார்கள்? "என்னைத் தீண்டியதால் நீ அழிந்து போவாய் என்று சீதையே கூறுகிறுள். அதோடு மட்டுமல்ல, இராவணன் தன்னை அனுபவித்தான் என்பதை வெட்கமில்லாமல் ஒப்புக்கொண்டு, அதை மழுப்புவதற்காக "உடலைத்தான் நீ விரும்பியபடி ஆட்டிப்படைக்க முடியும், ஆனுல் எனது உயிரை நீ தொடமுடியாது என்னும் பொருள்பட" அறிவு இராமனுக்கு அர்ப்பணமாகி இருப்பதால், இந்த உடலை நீ என்ன செய்தாலும் நான் வருந்தப்போவதில்லை எனக்கூறித் தன்னை உலக அபவாதத்தில் இருந்து காப்பாற்றிக்கொள்ள முயலுகிறுள்.

என்ன பதி பக்தி! என்ன பத்தினித்தன்மை!! அயலான் தொட்டுவிட்டான் அணங்கை; உடலை என்னவேண்டுமானுலும் செய், அறிவு அவருக்கே அர்ப்பணம் என அணங்கு கூறினுல் கேட்பேரார் என்ன கூறுவர்? மானமிழந்து இப்படிச் சொல்லுவதைவிட மாய்ந்திருக்கலாமே அவள்? சாகசம் செய்கிறுள் என்றுதானே செப்புவர். ஏன் சீதை உயிரைவிட்டிருக்கக்கூடாது? மானமிழந்தும் உயிர்வாழ வேண்டிய அவசியம் யாது? இங்கு மட்டுமல்ல சீதை தன்னை இராவணன் தீண்டியதை ஒப்புக்கொள்வது; யுத்தக்காண்டத்தின் இறுதியிலும், உத்தரகாண்டத்திலும் சீதை அதை நாலுபேர் நடுவில் ஒப்புக்கொள்கிறுள். அதைப்பின்னர் கவனிப்போம்.

இனிச்சுந்தர காண்டத்திற்குச் செல்வோம். அசோக வனத்திலே சீதை சிறை வைக்கப்பெற்றிருக்கிறுள்; அவளைக்காண இராவணன் வருகின்றுன். அவனைக் கண்டதும் சீதை மிரளுகிறுள். அவ்விதம் நடுங்கிய நிலையில் அவள் அமர்ந்திருந்த காட்சியை வால்மீகி வர்ணிக்கின்றுர்.

சருக்கம் 19. சுலோகம் 3. சுந்தர காண்டம்.

"தன்னுடைய சரீரத்தில் இராவணனது பாபதிருஷ்டி படாமலிருக்க வேண்டுமென்று இரண்டு துடைகளினுல் வயிற்றையும், இரண்டு கைகளால் ஸ்தனங்களையும் மறைத்துக் கொண்டு விசனமடைந்து உட்கார்ந்திருந்தாள்.

கவனித்தீர்களா! சீதை எப்படி உட்கார்ந்திருந்தாள் என்று. கைகளால் மார்பகத்தையும், கால்களால் மறைவிடத்தையும் மறைத்த வண்ணம் அமர்ந்திருக்கிறுள். அங்ஙனமாகின் சீதை எந்த நிலையில் இருந்திருக்கவேண்டும். ஆடை அணிந்திருப்பாளேயாகின் ஆடையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் என்றல்லவா வால்மீகி எழுதியிருப்பார். ஆடையற்ற நிலையில் தான் சீதை அசோகவனத்தில் இருந்திருக்கிறுள் என்பது நிச்சயமாகிறது. அல்லது மானத்தை மறைக்கப் போதுமான ஆடைகளில்லாது அவள் இருந்திருக்க வேண்டும்.

இதையே மீண்டும் 20ம் சருக்கத்தில் இரண்டாம் சுலோகத்தில் இராவணன் வாயிலாக வலியுறுத்துகிறுர் வால்மீகி. சீதை அங்ஙனம் மறைத்துக் கொண்டதைக் கண்ட இராவணன் கூறுகிறுன்.

"யானைத்துண்டம் போன்ற துடையை உடைய சீதையே! நீ என்னைக்கண்டு பயப்பட்டு ஸ்தனத்தையும், வயிற்றையும் எனக்குத் தெரியாமலிருக்கும்படி மறைத்துக் கொள்கிறுய் இது யுக்தமன்று.

(அடுத்த இதழில் முற்றும்)

கலைஞர் கருணாநிதி

கலைஞர் கருணாநிதி அவர்கள், கண் வைத்தியத்திற்காக எழும்பூர், கண் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறுர். இரண்டு ஆபரேஷன்கள் நடந்தன. வாய் திறந்து பேசமுடியாத நிலையில் இருக்கிறுர். "கண்ணுக்கு ஆபத்தில்லை" என்று டாக்டர்கள் உறுதியளிக்கின்றனர். ஆயினும் கொஞ்ச நாளைக்கு எந்த சிந்தனையும் கூடாது என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். சிந்தனையால், மூளைநரம்புகள் உணர்ச்சியடைந்து, கண் வலியை அதிகப்படுத்தும் என்பதே இதற்குக் காரணம். ஏராளமான இயக்கத் தோழர்கள் வந்து பார்த்துச் செல்கின்றனர். அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி வந்து கவனிக்கிறுர்கள். தோழர்கள் டைரக்டர் காசிலிங்கம், டைரெக்டர் பீம்சிங், முல்லை சத்தி, நெடுமாறன் ஆகியோர் அக்கறையாக கவனித்து வருகின்றனர். இன்னும் சில நாட்களில், கலைஞர் பூரண குணம் அடைந்து விடுவார் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்திலேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

—கண்ணதாசன்

திருவள்ளுவர் காலம் யாது?

திருவள்ளுவரின் கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர்கள் பலர். அவர்களிடையே கருத்துவேறுபாடுகள் நிறைந்திருக்கின்றன.

வள்ளுவர் காலம் சங்க காலத்தின் முற்பகுதி என்று சிலரும், சங்ககாலத்தின் பிற்பகுதி என்று சிலரும் எண்ணுகின்றனர்; துணிகின்றனர்.

'மனு'வில் உள்ள சில கருத்துக்கள் குறளில் காணப்படுகிறது. அதனால் குறள் பிந்தியது என்று ஆராய்ச்சி செய்து, குறளை மனுவுடன் ஒப்பிடவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக வள்ளுவரை கி.பி. 6-ம் நூற்றாண்டிற்கு தள்ளி, அதற்கு இரண்டொரு ஒட்டை ஆதாரங்களைக் காட்டி இருக்கிறார் தோழர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள்.

தமிழர்களை 'டம்ளர்கள்' என்று விசித்திர வியாக்யானம் செய்து, ஆசாரி அறிவுள்ளவனும் கூற அஞ்சும் முடிவுகளை, தன்மானமும் -இனஉணர்வும் அற்றுப்போன இவரைத் தவிர யாரே கூறவல்லார்! இவரையும் இவரது 'அற்புத' ஆனால் அறிவுள்ளோர் ஒப்புக்கொள்ளாத ஆராய்ச்சிகளையும் நினைக்கும் போதெல்லாம் "வீடணன் குணத்தை மிச்சம் விட்டுப் போனாயோ" என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது.

மேலும் இவர் கூறுகிறார்: "குறளில் பல அதிகாரங்கள் வடமொழி நூல்களிலுள்ள பொருள்களையே அமைத்துக்கொண்டுள்ளன": இந்த முடிவை, எல்லாத்தமிழறிஞர்களும் பேச்சை 'அயோக்கியத்தனம்' என்கின்றனர். குறிப்பாக நாவலர் சோமசுந்தர பாரதி எம்.ஏ. பி.எல், அவர்கள்,

"பல குறட் கருத்துக்கள் வடநூலில் வருதலால் குறள் பிந்தியது என்று முடிவுகட்டுதல் - குதர்க்கம் - பேதமை; வடநாட்டு பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரிகூட கூருத முடிவை சான்றுதரவும் கூருமல் தொல்காப்பியம் கி.பி. 300-க்குப் பிற்பட்டது என்றும் 'பிள்ளை' யவர்கள் வள்ளுவரை கி. பி. 6-ம் நூற்றாண்டுக்குத் தள்ளுவதில் வியப்பென்ன?" என்று பிள்ளையவர்களின் அறியாமைக்கு வருந்தி இருக்கிறார்.

கருத்துக்கள் ஒரு மொழிக்கு சொந்தமல்ல, பலமொழியினருக்கும் பொதுவானது. ஒரே கருத்து பலவேறு மொழிநூல்களில் வருவது இயல்பு. வள்ளுவர் முதல் இரண்டு நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதை அறிஞர் பலர் ஒப்புகின்றனர், வையாபுரியார் போன்ற இரண்டொரு 'டம்ளர்களைத்' தவிர.

இந்நிலையில் உலகின் சிறந்த நூல்களில் ஒன்றென கொள்ளப்படும் குறளாசிரியரின் காலம் பற்றி **திருவள்ளுவர் காலம் யாது?** என்ற தலைப்பின் கீழ் டாக்டர் **மா. இராசமாணிக்கனார் M. A; L. T; M.O. L; Ph. D.** அவர்கள் ஆராய்ந்து குறள் தொல்காப்பியத்திற்கு பின் எழுந்த நூல்; காரணம் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த பெரும்பாலான தொகை நூற்களிலும், சிலப்பதிகாரம்-மணிமேகலை போன்ற காவியங்களிலும் குறட்பாக்களின் தொடர்கள் எடுத்தாளப் பட்டிருத்தலின், கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது திருக்குறள் என்பது தெளியலாம்" என்று முடிவு கூறியுள்ளார்கள்.

தமிழறிஞர்களும், கலைபயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒப்பற்ற நூல். தமிழர்கள் கையில் இடம்பெற வேண்டிய ஆராய்ச்சியேடு! வண்ணமுகப்புடன் அழகான முறையில் வெளியிட்ட **காரைக்குடி செல்வி பதிப்பகத்தார்** நம் பாராட்டுதலுக்கும், அரிய ஆராய்ச்சியினை தக்க வரலாற்று - இலக்கிய சான்றுகளுடன் விளக்கிய இராசமாணிக்கனார் நாட்டோரின் நன்மதிப்பிற்குரியராவர்.

★

சிந்தனையாளர் ரூசோ

உலகத்தின் சிறந்த நூல்களில் ஒன்றெனக் கொள்ளப்படும் 'சமுதாய ஒப்பந்தம்' **(The Social Contract)** என்ற ஒப்பற்ற நூல் இயற்றியவன் ரூசோ!

"உண்மை என்பதில்தான் கடவுளைக் காணவேண்டும். மனிதனின் கடமைகள், மதத்திற்கும் கோயில்களுக்கும் அப்பாற்பட்டவை" என்று கூறி மதக்குருக்களின் சீற்றத்துக்கு ஆளானவன் ரூசோ! மறுமலர்ச்சியாளன், சீரிய சிந்தனையாளன். சக்திவாய்ந்த பிரஞ்சு சர்க்காரின் கவனத்தை தன்பால் ஈர்த்த சமுதாயப் புரட்சியாளன்! அந்த விடுதலை விரும்பியின் வாழ்க்கையை--ரூசோவே எழுதிய சுயசரிதையான **(The confession of Jean Jacques Rousseau)** என்ற நூலின் சில பகுதிகளை தமிழாக்கியும் — சுருக்கியும்—சுவை குன்றாமல் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய எளியநடையில் எழுதியிருக்கிறார் நண்பர் கோமேதகவேலு பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள்: நல்லபணி: குறிப்பாக இளைஞருலகிற்குப் பயன்படக்கூடியது.

விலை ரூ. 1-4-0 வெளியிட்டோர்
பிரேமா பிரசுரம்
சென்னை 24

★

தெரேசா

வேற்றுமொழி இலக்கியங்கள் தமிழாக்கப்படுவது பயன்படக் கூடியதும், வரவேற்கத் தக்கதுமாகும். பிறநாட்டு நல்லறிஞர்களின் சிறந்த கருத்துக்கள், பிறநாட்டுமக்களின் பண்பாடு, கலாச்சாரம் - பழக்க வழக்கங்கள் - மனநிலை போன்ற பலவற்றை இதனால் தமிழர்கள் உணர்ந்து, கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ளி, சிலவற்றை நாட்டு சூழ்நிலைக்கும் - முறைக்கும் ஏற்ப மாற்றி, வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். பொதுவாக மொழிபெயர்ப்புகளால் கருத்துப் பரிமாற்றம் ஏற்படுகிறது. மேலைநாட்டு மேதைகளின் கற்பனைத் திறனையும், புலமையையும் எண்ணி மகிழமுடிகிறது.

உலக இலக்கிய மேதைகளில் ஒருவனும், பிரபல பிரஞ்சு நாவலாசிரியனுமான **எமிலிசோலாவின்** நாவல்களில்'நாநா'வும் 'தெரேசா'வும் மக்களின் இதயத்தை தொட்ட ஒப்பற்ற நாவல்கள். அதில் 'தெரேசா'வை மூலத்தின் சுவை இம்மியும் கெடாமல் தமிழாக்கியுள்ளார் கவிஞர் குயிலன் அவர்கள். நல்ல தமிழ்! எளிய நடை! அழகான வண்ணமுகப்பு. உயர்ந்த ஆசிரியர்களின் உன்னத ஏடுகளை வெளியிட்டு வரும் நம் நண்பர், அருணன் அவர்கள் தம் 'அருணோதயத்தி'லிருந்து தமிழகத்திற்கு இந்நூலைத் தருகிறார். கலை மணம் வீசும் 'தெரேசா'வை தமிழகம் வரவேற்கத் தயங்காது என்பது என்னெண்ணம்.

விலை. ரூ. 2—0—0
விபரங்கட்கு:
அருணோதயம்
சென்னை-17

★

தையற் கலை

மனித இனத்தின் நாகரிக மேம்பாட்டினை உணர்த்துவதில் உடைகளின் பங்கு பெரிது. "மேலாடையின்றி சபை புகுந்தால் இம்மேதினியோர் நூலாயிரம் படித்திருந்தாலும் மதியார்" என்பது நாட்டில் வழங்கிவரும் பழமொழி. உடைக்கு உலகு அளித்து வரும் மதிப்பைக் காணும்போது 'தையல்' ஒரு தொழில் மட்டுமல்ல உன்னதமான ஒரு கலை என்பது தெளிவு. இந்தப் பயனுள்ள கலையை இக்காலங்களில் பெண்களும் பயிலத் தொடங்கியுள்ளனர். குடும்பத்திற்கு வேண்டிய உடைகளை அக்குடும்பத்திலுள்ள படித்த பெண்களே தயாரிப்பதை சில வீடுகளில் காணலாம். இது மகிழத்தக்க செய்தி, வரவேற்கத்தக்கதும் கூட. அழகுக்கு அழகு செய்யும் தையற்கலையின் நுணுக்கங்களையும் தைக்கும் முறைகளையும் வகைகளையும் எளிதில் எல்லோரும் தெரிந்து கொள்ளும் வண்ணம் இன்றளவும் தமிழில் எந்த நூலும் வெளிவந்ததில்லை. அந்தக் குறையை நமது நண்பரும், தையற்கலையில் 'பட்டம்' பெற்றவருமான கே. பி. சுந்தரம் **G. C. T.** அவர்கள் போக்கியுள்ளார். தையற் கலைபற்றிய முழுவிளக்கங்களை புரியக்கூடிய தமிழில் எழுதியுள்ளார்.

இந்தத் தேவையான அரிய நூலுக்கு அறிஞர் அண்ணாவின் மதிப்புரை அழகு சேர்க்கிறது. ஒவ்வொரு தையற் தொழிலாளியின் கையிலும், குடும்பத்திலும் இருக்க வேண்டிய விளக்க ஏடு! இதுவும் பயனுள்ள நூற்களை வெளியிட்டு வரும் 'பாரிநிலையத்'தாரின் வெளியீடுதான்!

விலை. ரூ. 2—0—0
பாரிநிலையம்
59, பிராட்வே
சென்னை - 1

★

ஆணும் பெண்ணும்

பெண்கள் படிக்கவேண்டும்: ஆனால் ஓரளவுதான்: உயர்நிலைப் பள்ளிகளோடு பெண்கள் படிப்பை முடித்துக் கொள்ளுதல் நலம் பயப்பதாகும்: இன்று சமூக அமைப்பில் உள்ள கோளாறுகளும்--'ஆண்-பெண்' இருபாலரும் சேர்ந்துபடிக்கும் முறையில்--அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் பாடத்திட்டங்களும்--அவற்றால் அவர்கள் பெறும் பயனையும் நோக்கின்--பெரும்பாலானவர்களுக்கு ஊறு விளைப்பதாகவே இருக்கிறது அமைப்பு முறை என்பது இந்நூலாசிரியரின் கருத்து. பெண்களைக் கல்லூரியில் படிக்க வைக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை கதையுருவில் சொல்லுகிறார் இதன் ஆசிரியர், மகிழ்ச்சி சதானந்தம் அவர்கள்: நல்ல தமிழில் விறுவிறுப்போடு கதை ஓடுகிறது: அத்துடன் சில இடங்களில் நம் சிந்தனையை தூண்டிவிட்டு, எண்ணச் சொல்லுகிறார் நம்மையெல்லாம். எல்லோரும் ஆனால் குறிப்பாக கல்லூரியில் படிக்கும் 'ஆணும் பெண்ணும்' அவசியம் படிக்க வேண்டிய நூல் இது!

விலை ரூ. 1-0-0- வெளியிட்டோர்
மகிழ்ச்சி இல்லம்
விருதுநகர்.

—வளவன்.

வெளிவந்துவிட்டது!

எஸ். பீ. நாதன் எழுதிய

"அந்தப்புரம்"

விலை ரூபாய் ஒன்று

கருணாநிதி பதிப்பகம்
சென்னை—2.

[redacted] Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed [redacted]